# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-5

மே-2020 (ரமழான்-1441)

விலை ரூ. 20/-




தப்லீக் ஜமாஅத் மீது அவதூறு

## நமது சட்டக் குழுமம் தொடுத்தப் போர்..!



## அல்குத்ஸ் தினம்

பகுதி - 2

**இஸ்ரேலிய பொருள்களைப் புறக்கணியுங்கள்**
**Boycott Israel Goods என்ற அமைப்பு அறிவிப்பு**



## திப்பு சுல்தான் ஷஹீதான நாள்

**Nov-10,1750 - May, 4-1799**

"

தங்களுடைய சத்திய உடன்படிக்கைகளை முறித்துக் கொண்டு, (நம்) தூதரை (ஊரைவிட்டு) வெளியேற்றவும் திட்டமிட்ட மக்களுடன் நீங்கள் போர் புரிய வேண்டாமா? அவர்களே (வாக்குறுதி மீறி உங்களைத் தாக்க) முதல் முறையாக துவங்கினர்; நீங்கள் அவர்களுக்கு அஞ்சுகிறீர்களா? (அப்படியல்ல!) நீங்கள் முஃமின்களாக இருப்பீர்களானால், நீங்கள் அஞ்சுவதற்கு தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனேதான்

(அல்குர்ஆன் - 9:13)

"


| | |
|---|---|
| அல்குத்ஸ் தினம் - 2 | - 4 |
| திப்பு சுல்தான் ஷஹீதான நாள் | - 7 |
| யவ்முல் - அல்குத்ஸ் | - 8 |
| 40-ஆம் ஆண்டில் தாஃவா | - 10 |
| உலக அளவில் தாஃவா இலக்கியங்களின் தாக்கங்கள் | - 16 |
| நூல் வெளியீடுகள் மற்றுமு தாஃவா பயிலரங்கள் | - 21 |
| இஸ்லாத்தை ஏற்பவர்கள் மீது இட்டுக்கட்டப்படும் வழக்குகள் | - 22 |
| மதமாற்றத் தடைச் சட்டம் | - 24 |
| அன்பகம் தாருல் உல்ஃபத் மதரஸா | - 28 |
| தாஃவா எதிர் இலக்கியங்கள் சவால்களும் சாதனைகளும் | - 30 |
| அனைவரது கண்களையும் திறந்த தாஃவா நூல் | - 33 |
| கள ஆய்வு - இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்? | - 35 |
| பிற மாநிலங்களில் தாஃவா | - 36 |
| இந்திய பாசிசத்தின் உண்மை முகம் | - 39 |
| NPR - NRC - CAA குடியுரிமைத் திருத்தச் சட்டமும் அதற்கு எதிரான போரில் நாமும் | - 42 |
| முஸ்லிம்களை நாடற்றவர்களாக ஆக்கிடும் சதிக்கு எனதிரான போர் | - 48 |
| தப்லீக் ஜமாஅத் மீது அவதூறு நமது சட்டக் குழுமம் தொடுத்தப் போர் | - 50 |



மே-2020

# வைகறை வெளிச்சம்

ரமழான்-1441)

ஆசிரியர்

மு. குலாம் முஹம்மது, M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்

கே.எம். இலியாஸ் ரியாஜி, M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**DARUL ISLAM FOUNDATION TRUST**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 81481 29887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**

52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham



# அல்குத்ஸ் தினம்

## பகுதி - 2

# இஸ்ரேலிய பொருள்களைப் புறக்கணியுங்கள் Boycott Israel Goods என்ற அமைப்பு அறிவிப்பு

இப்படி ஓர் அமைப்பு உருவாக்கப்பட்டு வளர்ந்து வருகின்றது. இது இஸ்ரேல் நாட்டின் பொருள்களை மட்டும் புறக்கணிக்க சொல்லவில்லை. ஒருபடி மேலேபோய் நுணுக்கமான, இன்னும் பல புறக்கணிப்புகளைப் பரிந்துரைக்கின்றது.

அவை

*1)* இஸ்ரேல் நாட்டுக்கு இலாபம் சென்றடையும் அளவில் இயங்கும் தொழிற் சாலைகளின் பொருள்களைப் புறக்கணிக்க சொல்கின்றது. இதனால் இஸ்ரேல் நாடு முதலீடு செய்யும் பொருள்கள் புறக்கணிக்கப்படுகின்றன.

*2)* இஸ்ரேலை ஆதரிக்கும் கம்பெனிகளின் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

*3)* இஸ்ரேலை ஆதரிக்கும், கம்பெனிகள் மார்க்கெட் செய்யும், அதாவது சந்தைப் படுத்தும் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

*4)* இஸ்ரேலில் முதலீடு செய்யும் தொழில் நிறுவனங்களின் பொருள்களை வாங்கிட வேண்டாம்.

இப்படி ஒரு பொருளாதார தடையை இஸ்ரேல் மீது போட்டு வருகின்றது இந்த அமைப்பு.

இந்தப் பொருளாதார தடை இஸ்ரேலுக்கு மிகையான நெருக்கடியைக் கொடுத்திருக் கின்றது. அதனால்தான் இஸ்ரேலின் பிரதமர் நட்யான்ஹூ எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்கின்றோம் எனக் கூறி வருகின்றார்.

"எங்கள் நாடு யூதர்களின் நாடு என்றாலும், எங்கள் நாட்டில் முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள், பகாய்கள், இப்படி எல்லோரும் வாழுகின் றார்கள். அவர்கள், வழக்கறிஞர்களாகவும், சட்டம் செய்யும் அவைகளில் அங்கம் வகிப் பவர்களாகவும், நீதிபதிகளாகவும் இருக்கின் றார்கள். எங்கள் நாடாளும் மன்றத்தில் முஸ்லிம்கள் தொழுவதற்காக, ஓர் இடம் தனியாக ஒதுக்கப்பட்டிருக்கின்றது." (இதோ பாருங்கள், அதைப் படம் பிடித்துக் காட்டுகிறார்) இப்படிக் கூறிடும் கட்டாயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் அவர்களின் பம்மாத்து களாகவுமிருக்கலாம். ஆனால், அவர்கள் பொரு ளாதார அழுத்தங்களை உணருகின்றார்கள் என்பதை நாம் அறிந்திட முடிகின்றது.

### திருந்தாது இஸ்ரேல்

இஸ்ரேல் இதுபோன்றவற்றால் திருந்திடும் என்ற நம்பிக்கை யாருக்கும் வேண்டாம் என்ற அளவில் அமெரிக்க அதற்கு நிதி உதவிகளை அள்ளிக் கொட்டுகின்றது.

இப்போது அமெரிக்காவுக்குள், சில அமைப்புகள் இஸ்ரேலுக்கு வாரி வழங்கிடும் உதவிகளை நிறுத்திட வேண்டும் என்ற கோஷங்கள் போட்டு வருகின்றன. ஆனால் அமெரிக்காவில் இயங்கும் யூதலாபி (Jewish Lobby) மிகவும் பலமானது.

நம் நாடும் இஸ்ரேலுக்கு அதிகமான பணத்தை, இராணுவ தளவாடங்கள் வாங்குவது என்ற பெயரில் தந்து கொண்டிருக்கின்றது. இது காங்கிரஸ் காலத்திருத்திலிருந்தே நடந்து வருகின்றது. இதனால் இஸ்ரேல் இழைத்துவரும் கொடுமைகளுக்கு எந்தக் குறையுமில்லை என்பதை நம்மால் நடைமுறையில் காண முடிகின்றது.

## இஸ்ரேலின் கொரனோ காலக் கொடுமைகள்

ஒருபுறம் ரமழான் கரீம், எனப் பேசினாலும் நட்யான்ஹூ, பாலஸ்தீனில் வாழும் மக்களை குறிப்பாக "காஸா" பகுதியில் வாழும் மக்களை கொடுமைப்படுத்துவதை நிறுத்தவில்லை. இந்தக் கொரனோ காலத்தில் மருத்துவக் கருவிகளும், மருத்துவ உதவிகளும், காஸா பகுதியை சென்றடைவதை தடுத்து வருகின்றார்.

காஸா பகுதி மக்கள் மருத்துவ மனைகளுக்குச் செல்லும் பகுதியில், தடைகளை வெட்டிப் போட்டு வருகின்றார். வழக்கம்போல நீண்ட நேர சோதனைகளுக்குப் பின்னரே அவர்கள் மருத்துவப் பகுதியில் உள்ளே நுழைய அனுமதிக்கப்படுகின்றார்கள். அதன் பின்னர்தான் அவர்கள் மருத்துவ உதவிகளைப் பெற்றிட முடிகின்றது.

காஸா பகுதி மக்களுக்காக கத்தர் நாடு 150 மில்லியன் டாலர்களை உதவித் தொகையாக இந்தக் கொரனோ காலத்தில் அனுப்பியது. அந்தத் தொகை அந்த மக்களைச் சென்றடை யாமல் தடுத்தது இஸ்ரேல். ஓர் அப்பட்டமான மனிதாபிமானமற்ற செயல். ஆனால் ஹமஸ் இயக்கம் இஸ்ரேலிடம், நீங்கள், அந்தத் தொகையை விடுவிக்காவிட்டால், நாங்கள் ஏவுகனை தாக்குதல்களை நடத்துவோம். நீங்கள் எல்லாம் ஏவுகணைகளிலிருந்து தப்பித்திட பங்கர்கள் என்ற பூமிக்கீழுள்ள சுரங்கங்களுக்கு ஓடுவீர்கள். அதனால் அங்கு ஜன நெருக்கம் ஏற்படும் கொரனோ வேகமாகப் பரவும். இதைச் செய்திட அதிக நேரமாகாது.

ஆனால் எங்கள் மார்க்கத்தில் இதற்கு அனுமதியில்லை. நீங்கள், தொடர்ந்து எங்களை கொரனோவுக்கு பலியாகிட நிர்பந்தித்தால், நாங்கள் எங்கள் மார்க்க அறிஞர்களிடம் அனுமதியைக் கோரிட வேண்டியது வரும் என்றது ஹமஸ்.

இது இஸ்லாமிய அறிஞர்களிடையே பெரும் விவாதமானது. சிலர் அனுமதிக்கலாம் என்றார்கள். சிலர் அந்த நிலைக்கு (ஏவுகணைகளால் தாக்கிடும் நிலைக்குப்) போக வேண்டாம் என்றார்கள். இது அல்ஜெசீராவின் செய்தி முகமையில் ஓரிருநாள்கள் ஓடியது. இதைக் கண்ணுற்ற இஸ்ரேல், அந்தப் பணத்தை தடுப்பதிலிருந்து பின்வாங்கிக் கொண்டது.

ஆக, யூத பாசிசமான வலதுசாரி சியோனிச வாதி என்பதை தவறாமல் நிரூபித்துக் கொண்டிருக்கின்றார்.

நெருக்கடி அதிகமாகி சமாளிக்க முடியாத நிலை வரும்போது, எதுவுமே நடக்காதது போலும், நல்லவரைப் போலும் நாடகமாடு கின்றார். இஃது பாசிஸ்ட்டுகளின் தனியான உத்தி என்பதை நன்றாக அறிந்துதான் பெருமானார் (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அன்றே எச்சரித்தார்கள்.

## தொடரும் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகள்

இப்படி ஒரு பக்கம், நல்லவர்களைப் போல் நடிக்கும் இவர்கள், மேற்கு கடற்கரைப் பகுதி என்றழைக்கப்படும் (West Bank) பாலஸ்தீனின் முக்கியப் பகுதியை கொஞ்சம், கொஞ்சமாக ஆக்கிரமித்து வந்தனர். இடங்களை ஆக்கிரமித்த தோடு அந்த இடங்களில் யூதர்களுக்கு வீடுகளைக் கட்டித்தந்து, அவர்களை குடியமர்த்தவும் முயற்சிகளை மேற்கொண்டனர். இதனை உலக மக்கள் அனைவரும் கண்டித்தனர்.

ஆனால், அதனை அமெரிக்கா ஆதரித்தது. இதனால் உலக முஸ்லிம்கள், அமெரிக்காவின் போக்கை கண்டித்து வருகின்றனர். இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை செய்து கொண்டேதான், இன்னொரு பக்கம் ரமழான் வாழ்த்துகளையும் சொல்லி வருகின்றார்கள் இந்த ஆக்கிரமிப்

*பாளர்கள்.*

*தற்போது, கொரனோ காலம் இது என்பதால் அல்அக்ஸா தற்காலிகமாக விடுமுறையில் உள்ளது. கொரனோ காலம் அடங்கியவுடன் திறக்கப்படும். அல்ஜெசீரா*

## அல்குத்ஸ் - என்ற ஜெரூசலத்தில் வீற்றிருக்கும் "அல்-அக்ஸா" மஸ்ஜித்-இன் முக்கியத்துவம்

*நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டேன், "பூமியில் எது முதல் மஸ்ஜித்?" "புனிதமிக்க மஜ்ஸித் ஹராம் (காபா)" என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். அடுத்து எது? என நான் கேட்டேன், தொலைவில் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா என பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். (அறிவிப்பு, அபூதர் (ரழி) - முஸ்லிம்)*

### பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

மூன்று பள்ளிவாசல்களைத் தவிர வேறெங்கும் நன்மையை நாடி பயணம் செய்வது - என்பதில்லை. அவை மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுல் நபவி என்னுடைய பள்ளிவாசல், பைத்துல் முகத்திஸ்-ல் உள்ள மஸ்ஜிதுல் அக்ஸா' - புகாரி : முஸ்லிம்.

இந்த மஸ்ஜித் அல்-அக்ஸா தான் முஸ்லிம்களின் முதல் கிப்லா, தொழுகை யில் முன்னோக்கும் இடமாக இருந்தது.

பெருமானார் (ஸல்) அவர்களின் பெயரால் நிறுவப்பட்ட, மதினா பள்ளி வாசலிலும், கிப்லா, தொழுகையில் முன்னோக்குமிடம் இதுவாகவே இருந்தது. 17 மாதங்களுக்குப் பின், இறைவன் கிப்லாவை கஆபாவை நோக்கித் திருப்பினான்.

"நபியே! நாம் உம்முகம் அடிக்கடி வானத்தை நோக்கிட காண்கின்றோம். எனவே நீர் விரும்பும் கிப்லாவின் பக்கம் உம்மைத் திடமாகத் திருப்பி விடுகின் றோம். ஆகவே நீர் இப்போது (மக்காவின்) மஸ்ஜிதுல் ஹராம் பக்கம் உம் முகத்தைத் திருப்பிக் கொள்ளும். (முஸ்லிம்களே!) நீங்கள் எங்கிருந்தாலும், உங்கள் முகங்களை அந்தப் பக்கம் திருப்பிக் கொள்ளுங்கள்' (அல்குர்ஆன் - 2 : 143)

விண்ணேற்றம், (மிஃராஜ்) என்ற இஸ்லாமிய வரலாற்றின் சிறப்புமிக்கப் பயணத்தின் மையப் பகுதி அல்-அக்ஸா மஸ்ஜித்தான். (காண்க அல்குர்ஆன் - 17:1)

### பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்

"பைத்துல் முகத்திஸ் - அல்-அக்ஸாவில் சென்று தொழுங்கள். இல்லையென்றால் அங்கே எரியும் விளக்குகளுக்குப் பயன்பட கொஞ்சம் எண்ணெய்யை அனுப்புங்கள்" (அஹ்மத்)

"ஹஜ் அல்லது உம்ராவுக்குச் செல்லும் ஒருவர் மஸ்ஜிதுல் அக்ஸாவில் இஹ்ராம் அணிந்து பின்னர் புனித மஸ்ஜித்திற்கு (மக்கா விலுள்ள கஆபாவிற்கு) செல்வாரேயானால், அவருடைய முன் பாவங்களும், பின் பாவங்களும் மன்னிக்கப்பட்டுவிடும்.' (திர்மிதி, அஹ்மத்)

### பாலஸ்தீன முஸ்லிம்களின் விருப்பம்

**உலகெங்கும் உள்ள முஸ்லிம்கள் அல்-குத்ஸ் வரவேண்டும். அல்-அக்ஸாவில் தொழ வேண்டும். இதன்மூலம் இவையெல்லாம் உலக முஸ்லிம்களுக்குச் சொந்தம் என்பதை நிலை நாட்டிட வேண்டும்.**

**இன்ஷா அல்லாஹ் இதைச் செய்வோம். ஒன்றிணைவோம் பாலஸ்தீன மக்களுடன் பைத்துல் முகத்திஸ்-ஐ மீட்போம்.**



மே-4

# திப்பு சுல்தான் ஷஹீதான நாள்

**Nov-10,1750 - May, 4-1799**

திப்பு சுல்தான் ஷஹீத், அவர்கள் மைசூர் சாம்ராஜ்யத்தை வளமிக்கதோர், பூமியாக ஆக்கிக்காட்டியவர். மாசில் என்ற ஏவுகணை பொறியியலை நம் நாட்டில் அறிமுகப்படுத்தியவர். ஆங்கில ஏகாதிபத்தியத்தைத் தொடர்ந்து வீழ்த்திக்காட்டியவர். இதனால் திப்புசுல்தான் வாழும் வரை இந்தியா நமக்கில்லை என ஏங்கிக் கலங்கினர் ஆங்கிலேயர்கள்! திப்புசுல்தான் வாழும் வரை நம்மில் யார் உயிருக்கும் பாதுகாப்பில்லை எனப்பதறினர் ஆங்கில ஆக்கிரமிப்பாளர்கள். திப்புசுல்தான் வாழ்ந்தக் காலத்தில் இந்தியா ஒரு வல்லரசு.

அவர் ஷஹீதாகிவிட்டார் என்பதை அறிந்தபோதுதான் "இனி இந்தியா நமக்கு என்றார்கள்" ஆங்கிலேயர்கள். இன்று நாட்டுப்பற்றைக் குத்தகைக்கு எடுத்துக் கொண்டோம். எனக் கூப்பாடு போடுபவர்களின் துரோகந்தான் திப்புவை ஷஹீதாக்கி இந்தியாவை ஆங்கிலேயர்களின் கைகளில் தந்தது. (பகவான் கித்வை : திப்புவின் வாள்)

## சமூக விடுதலையில் திப்புசுல்தான்

தென்னிந்தியாவில் ஜாதிக் கொடுமைகள் நிறைந்தும் மலிந்தும் கிடந்த காலம் அது. இந்து மதத் துறவி சுவாமி விவேகானந்தர் அவர்கள் தெற்கு திருவாங்கூரை "பைத்தியக் காரர்களின் விடுதி" என்றழைத்தார்கள். அந்த அளவுக்கு ஜாதிக் கொடுமைகளைக் கண்டு மனம் நொந்தார்கள்.

"யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை."

திப்பு சுல்தான் நடவடிக்கை எடுத்தார். அவர் திருவிதாங்கூர் அரசருக்கு ஒரு கடிதம் எழுதுகின்றார். (இப்படி) "நான் உங்கள் ஊர் வழியாகச் சென்றபோது, அங்குள்ள பெண்கள் இடுப்புக்குமேல் ஆடை அணியாமல் இருந்ததைப் பார்த்தேன்."

"அவர்கள் என்ன காரணத்தால் ஆடை அணியவில்லை?"

"ஒருவேளை வறுமைக்காரணமாக அவர்கள் ஆடை அணியவில்லை என்றால், அவர்களுடைய வருமானத்தை மேம்படுத்த வழி செய்யுங்கள். அல்லது சமூகக் கட்டுப்பாடுகள் காரணமாக அணியவில்லையெனில் இத்தனை நாளுக்குள் (ஒரு தேதியைக் குறிப்பிட்டு) அதை சரி செய்து ஆடை அணியச் செய்ய வேண்டும்.

"இல்லையென்றால், நான் உங்கள் மீது போர் தொடுத்து அந்த மக்களை மாற்றுவதைத் தவிர எனக்கு வேறு வழிஇல்லை."

- (ஆதாரம் நூல் - நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்) T. லஜபதிராய், பக்.6,7அதனால் மே-4, மேலாடையின் நாளும் கூட....

# யவ்முல் குத்ஸ்




## அல்குத்ஸ் தினம் - ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை

அல்குத்ஸ் - என்பது வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெரூசலத்தின் அரபு பெயர். அங்கேதான் முஸ்லிம்களின் முதல் கிப்லாவான அல்அக்ஸா மஸ்ஜித் வீற்றிருக்கின்றது. அஃது இப்போது முஸ்லிம் வக்ஃபின் கீழ் இருந்தாலும், இஸ்ரேல் நாட்டின் (யூதர்களின்) கிடுக்குப் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கின்றது. அதனை மீட்டெடுக்கும், பெரும் பயணம் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

அந்த வகையில் உலக முஸ்லிம்களின் கவனத்தை இந்தப் பக்கம் ஒன்று சேர்த்திட பிரகடனப் படுத்தப்பட்டதே அக்குத்ஸ் தினம். யவ்ம் அல்குத்ஸ்

### அல்குத்ஸ் தினத்தின் நோக்கம்

*1968* ஆம் ஆண்டு முதல் யூதர்கள் மே மாதத்தில் ஒருநாள் மாலையில் தொடங்கி மறுநாள் இரவு வரைக்கும் ஜெரூசலம் நாள் - Jerusalem Day என அறிவித்து அனுசரித்து வருகின்றனர். (இந்த வருடம் *(2020)* மே, *21*-ஆம் நாள் மாலையில் தொடங்கி, *22* ஆம் நாள் இரவு வரை ஜெரூசலம் நாள் என அறிவித்துள்ளது)

இதில் ஜெருசலம் அல்குத்ஸ் தங்களுக்குத்தான் என்பதை வலியுறுத்தும் வகையில் விழாக்களையும், விவாதங்களையும் நடத்துகின்றது. இந்த நாளை இஸ்ரேலின் தேசிய விடுமுறை நாளாக வருடந்தோறும் அறிவித்து வருகின்றது.

இஸ்ரேலின் இந்த ஆக்கிரமிப்பு மனப்பாண்மையை எதிர்க்கவும், உலக முஸ்லிம்களின் கவனத்தை அல்குத்ஸ்-ஐ (ஜெரூசலத்தை) மீட்பதின் பக்கம் திருப்பிடும் முகமாக அறிவிக்கப்பட்டதே ஜெருசலம் மீட்புத்தினம். அல்குத்ஸ் தினம்.

### அல்குத்ஸ் தினம் - யவ்முல் குத்ஸ் வரலாறு

அல்குத்ஸ் தினம் *1979* (ஆகஸ்ட் *8*) முதல் ஒர் மக்கள் இயக்கமாக உலக முஸ்லிம்களிடையே அறிவுறுத்தப்பட்டது.

இப்போது இது சர்வதேச அல்குத்ஸ் தினம் என அழைக்கப்படுகின்றது. International Quds Day. ஏனெனில் இதில் உலக நாடுகள் அனைத்தும் பங்கெடுத்துக்கொள்கின்றன. இந்த இயக்கத்திற்கு *1988* ஆம் ஆண்டு ஒர் புது உத்வேகம் கிடைத்தது.

### OIC : இஸ்லாமிய நாடுகளின் பேரமைப்பு ORGANIZATION OF ISLAMIC COUNTRIES

*1988* ஆம் ஆண்டு OIC என்ற உலக இஸ்லாமிய நாடுகளின் பேரமைப்பு இந்த நாள் முஸ்லிம்கள் அனைவரும் கடைபிடிக்க வேண்டும் என்றும் பைத்துல் முகத்திஸ் என்ற ஜெரூசலத்தையும், அதில் வீற்றிருக்கும் அல்அக்ஸா மஸ்ஜித்தையும் மீட்பதின் பக்கம் உலக முஸ்லிம்களின் கவனத்தைத் திருப்பிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. இதனால் இது முழு இஸ்லாமிய கவனத்தைக் கவர்ந்தது. உலக முஸ்லிம்களின்கவனத்தையும்கவர்ந்தது. இந்த நாளில் இஸ்ரேல் என்ற யூத நாடு, பாலஸ்தீன முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்துவிடும் கெடுபிடிகளை உலக மக்கள் அனைவர் கவனத்திற்கும் கொண்டுவந்தது.

### உலக மக்கள் இயக்கம்

இஸ்ரேல் பாலஸ்தீனில் வாழும் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்திடும் கொடுமைகள், கொலைகள், ஆக்கிரமிப்புக்கள் இவை அதிகரிக்க அதிகரிக்க இந்த இயக்கம் ஒரு பெரும் மக்கள் இயக்கமாக வளர்ந்தது, வலுப்பெற்றது.

அதன் அதிசயத்தக்க வளர்ச்சியாக ஜெர்மனி, கனடா, சுவிடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இயங்கும் பல்வேறு அமைப்புகள், (இவை சகோதர சமுதாயத்தவர்களால் நடத்தப்படுபவை) இதில்

கலந்துகொள்ளுகின்றன. இதனால் இஸ்லாமிய நாடுகளைக் கடந்தும் இந்த இயக்கம் படர்ந்தது.

### கொரோனா

இது கொரோவின் காலம் என்பதால் "ONLINE RALLY" இந்த நாளில் இணையதள போர் ஒன்றை அறிவித்திருக்கின்றனர் உலக மக்கள்.

இத்தோடு சர்வதேச மனித உரிமை ஆணையமும் இதில் கலந்து கொண்டுள்ளது.

இவையெல்லாம் பாலஸ்தீன மக்கள் கடந்த 72 ஆண்டுகளாக அடைந்து வரும் அநீதிகளை உலகெங்கும் இடைவிடாமல் எடுத்துச் சொன்னதன் விளைவு.

### பாலஸ்தீனுக்காக யூதர்கள்

உலகில், இஸ்ரேலுக்கு வெளியே வாழும் யூதர்களும், இஸ்ரேலின் அட்டூழியங்களைக் கண்டிக்கத் தொடங்கிவிட்டனர்.

பிரிட்டன் (ஆங்கில நாட்டில்) யூதர்கள் ஓர் அமைப்பைத் தொடங்கியுள்ளனர், அதன் பெயர் (IJAN) Jewish Network for Palestinian (UK) பாலஸ்தீனியர்களுக்கான யூத ஒற்றிணைப்பு தளம் என்றொன்றை தொடங்கி இருக்கின்றார்கள் 2008 ஆம் ஆண்டு. இந்த அமைப்பு உலகெங்கும் படருகின்றது.

யூதர்களால் இப்படி ஒரு அமைப்பா? என்ற வினா நமக்குள் எழுந்தது. உடனேயே அதன் உண்மைத்தன்மைகளை கண்டறிய முயற்சிகளை மேற்கொண்டோம். ஆங்கில இதழியல் தளங்களில் எழுதிக்கொண்டிருக்கின்ற பத்திரிகையாளர்களிடம் கேட்டோம். அதன் நன்பகத்தன்மையை சந்தேகப்பட வேண்டாம் எனச் சொன்னார்கள். ஆனாலும் நாம் ஜாக்கிரதையாகவே இதனை கையாள வேண்டும்.

### ஹோராஜா மேயர் : 1924-2014

இந்த அமைப்பை உருவாக்கியவர்களில் ஒரு விஞ்ஞானி ஹோராஜா மேயர் என்பவராவார். இவர் ஜெர்மனியில் யூதர்கள் இனப்படுகொலைகளுக்கு ஆளாகியபோது அதிலிருந்து தப்பித்தவர் என அறியப்படுகின்றார். இவர் இந்த அமைப்பைத் தொடங்கியதற்கு ஒரு காரணத்தைச் சொல்லுகின்றார். அது அனைவரையும் நம்பிடச் செய்கின்றது.

அந்தக் காரணம்,

யூதர்களைக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியவர்கள் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள். அந்தக் கொடுமைகளைச் சொல்லித் தான் நாம் உலகெங்கும் அனுதாபத்தை சம்பாதிக்கின்றோம். ஆனால் அந்தக் கொடுமைகளை விஞ்சும் கொடுமைகளை நாம் பாலஸ்தீனில் செய்து கொண்டிருக்கின்றோம். ஆகவே அவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

(IJAN) இஜான் என்றழைக்கப்படும், இந்த அமைப்பு எல்லா யூதர்களும் இஸ்ரேல் நாட்டை ஆதரிக்கவில்லை. இஸ்ரேல் ஒரு இனவாத நாடு Racist Country. அங்கு முஸ்லிம்களைக் கொலை செய்வது என்பது இனவெறிக் கொலைகள்தான். எனவே இஸ்ரேலை ஓர் இனவெறி நாடு என அறிவிக்க வேண்டும். (Apparthied State) என்றும் கோஷமிடுகின்றார்கள். இந்த அமைப்பிற்கு இன்னொரு பெயர் - சர்வதேச சீயோனிச எதிர்ப்பு அமைப்பு.

உலகிலுள்ள பல அமைப்புகள் : இந்த அல்குத்ஸ் நாளை ; "Justice for Palestinian People" பாலஸ்தீன மக்களுக்கு நீதி தேடிடும் நாள் என அறிவித்துள்ளன. இது கவனிக்கத்தக்கது.

சர்வதேச இஸ்லாமிய மனித உரிமை ஆணையம் (IIHRC - International Human Rights Commission) பாலஸ்தீன கொடியை பறக்க விடுங்கள் Fly the Flag என அறிவித்துள்ளது.

இந்த நாளில் யூத இஸ்ரேலின் அநியாயங்கள் அனைத்தும் உலக மக்கள் அனைவருக்கும் வெட்ட வெளிச்சமாகி வருகின்றது. இஸ்ரேலுக்கு அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இந்தப் பின்னணியில் தான் ரமழானில் இஸ்ரேலின் கொடுங்கோல் ஆட்சியாளர் நட்யாஹூவின். "ரமழான் கரீம்" ரமழான் வாழ்த்துகளைப் பார்த்திட வேண்டும்.

ஆக அல்குத்ஸ் தினம் அறுதி வெற்றி நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

### நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம் / தாருல் இஸ்லாம்

தொடக்க நாள் தொட்டே நீதி அமைதிக்கான மக்கள் இயக்கமும், தாருல் இஸ்லாமும், அல்குத்ஸ் - தினத்தை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அறிமுகப் படுத்தி வருகின்றது.

அதேபோல், உலக முஸ்லிம்களின் முதல் கிப்லாவான அல் அக்ஸா மஸ்ஜித் - அதன் முக்கியத்துவம் அதன் வரலாறு ஆகியவற்றையும் விரித்துரைத்து வருகின்றது.

ஒவ்வொரு வருடமும் யூதர்கள் அல்அக்ஸாவிலும், பாலஸ்தீன மக்கள் மீதும் தொடுக்கும் தாக்குதல்களையும், கட்டவிழ்த்துவிடும் குரூரங்களையும், கொலைகளையும் தவறாமல் பட்டியலிட்டு வருகின்றோம். அல்அக்ஸாவை சுற்றி நடக்கும் அத்தனை நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தி நமது **வைகறை வெளிச்சம்** இதழிலும் வெளியிட்டு வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

அல்அக்ஸா மீட்கப்படும் வரை நமது
முயற்சிகள் தொடரும்...

அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

# 40 -ஆம் ஆண்டில் தாஃவா

"அவனே தன் தூதரை நேரான வழியைக் கொண்டும், சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பியருளினான். சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக! இதற்கு அல்லாஹ்வே சாட்சியாக இருப்பது போதுமானது." (48:28 - அல்குர்ஆன்)

இதனை சாதிப்பதற்கு அல்லாஹ் இப்படி கட்டளை இடுகின்றான்.

"நீர் உம்முடைய இறைவனின் பால் அழைத்தே வருவீராக. நிச்சயமாக நீர் இணை வைப்போரில் ஒருவராகிவிட வேண்டாம்."

(28:87 - அல்குர்ஆன்)

(நபியே!) உம் இறைவனின் பாதையில் (மக்களை) விவேகத்துடனும் அழகிய உபதேசத்தைக் கொண்டும் நீர் அழைப்பீராக, இன்னும் அவர்களிடத்தில் மிக அழகான முறையில் தர்க்கிப்பீராக! நிச்சயமாக இறைவன் அவன் வழியை விட்டுத் தவறியவர்களையும் நேர்வழிப் பெற்றவர்களையும் நன்கறிவான்.

(16:125 - அல்குர்ஆன்)

இறைத்தூதர்களை ஏன் அனுப்புகின்றேன் என்பதற்கு அல்லாஹ் காரண காரியங்களின் அடிப்படையில், ஓர் காரணத்தைக் கூறுகின்றான்...

மனிதர்கள் "அவர்களுடைய கைகள் செய்து முற்படுத்திய தீவினை காரணமாக, அவர்களுக்கு ஏதேனும், சோதனை வரும்போது அவர்கள் எங்கள் இறைவா! நீ எங்களுக்குத் தூதுர் ஒருவரை அனுப்பி வைத்திருக்க வேண்டாமா? அப்போது நாங்கள் உன் வசனங்களைப் பின்பற்றி நாங்களும் முஃமின்களில் உள்ளவர்களாகி இருப்போம்" என்று கூறாதிருக்கும் பொருட்டும் உம்மைத் தூதுராக அனுப்பினோம்." (அல்குர்ஆன் - 28:47) மேலும் இறைவசனம் 4:165-ஐ பார்க்கவும்.

இதனால்தான் அல்லாஹ்வின் தூதுர் அவர்கள் ஓய்வில்லாமல் உழைத்தார்கள். 23 ஆண்டுகளில் அறியப்பட்ட உலகின் அரைப் பகுதி வரை இஸ்லாத்தை எடுத்துச் சொல்லும் அதிசயத்தைச் சாதித்தார்கள்.

இறுதியில் தன் விடைபெறும் ஹஜ்ஜில் - (ஹஜ்ஜத்துல் விதாவில்) இப்படிச் சாட்சியம் பெற்றார்கள் பெருமானார் (ஸல்) அவர்கள். அங்குக் குடியிருந்த லட்சத்திற்கு மேற்பட்ட முஸ்லிம்களை நோக்கி இப்படிக் கேட்டார்கள்...

"நான் இறைவனின் தூதை உங்களிடம் ஒப்படைத்துவிட்டேனா?"

இதற்கு குழுமியிருந்த மக்கள்

"ஆமாம் நீங்கள் ஒப்படைத்துவிட்டீர்கள். இதற்கு நாங்கள் சாட்சி"

என பதில் சொன்னார்கள்.

உடனேயே இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் வானத்தை நோக்கித் தன் கைகளை உயர்த்தி "இதற்கு நீயே சாட்சி" என "அஷ்ஹதன்! அஷ்ஹதன்! அஷ்ஹதன்!" என மூன்று முறை கூறினார்கள்.

பின்னர் அதே (விடைபெறும்) ஹஜ்ஜில் குர்பானின் நாளில், இதே கேள்வியை


கேட்டு, பதிலைப் பெற்று அல்லாஹ்வால் சாட்சியத்தையும் பெற்று அந்த மக்களிடம் இப்படிக் கூறினார்கள்.

"இங்கே வந்திருப்பவர்கள், இங்கே வராதவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள், அவர்கள் உங்களை விட நன்றாக புரிதல் உடையவர்களாக இருப்பார்கள்." (ஷஹீஹுல் புகாரி 1/234)


## அறியப்பட்ட உலகின் அரைப்பகுதி இஸ்லாத்தில் இணைந்தது...?

## முதல் பிரதமர் பண்டித நேருவின் சாட்சியம்....

பெருமானார் (ஸல்) அவர்களின் இந்த சொற்களை, கட்டளையை, செவிமடுத்த வுடன், அங்கு குழுமியிருந்தவர்களில் பலர் தங்கள் வாகனங்கள் எந்தத் திசையை நோக்கி நின்றனவோ அந்தத் திசையை நோக்கிப் பயணம் செய்தார்கள். (மர்ஹூம் முஹம்மத் குதுப். - Islam The Misunderstood Religion)




இந்த மக்கள், மேற்கொண்ட முயற்சி, செய்தத் தியாகம், தங்கள் சொந்த ஊரையோ, உணவையோ ஓய்வையோ பற்றிக் கவலைப் படாமல் இயங்கியதால் அடுத்த (25) இருபத்தைந்து ஆண்டுகளுக்குள் இஸ்லாம் அன்று அறியப்பட்ட உலகின் அரைப்பகுதி வரை சென்றடைந்தது என்கின்றார் நேருஜி. (Glimpses World History)




## இன்று இஸ்லாத்தின்பால் அழைக்கும் பொறுப்பு

இன்று இந்தப் பெரும் பொறுப்பைச் சுமவப்பவர்கள் அந்த நேர்வழியையும், அல்லாஹ்வின் இறுதி வேதத்தையும் பெற்ற முஸ்லிம்கள்தாம்.

பெருமானார் (ஸல்) அவர்களை முன்னிறுத்தி நமது பொறுப்பை அல்லாஹ் இப்படி உணர்த்தினான்...

**'நம்பிக்கைக் கொண்ட (முஸ்லிம்களே!) அவ்வாறே உங்களை நடு நிலைமைக் கொண்ட சமுதாயத்தினராக ஆக்கினோம். ஆகவே நீங்கள் ஏனைய மனிதர்களுக்கு வழிகாட்டக் கூடிய சாட்சியாக இருங்கள்.**

நம்முடைய தூதுர், உங்களுக்கு வழிகாட்டக் கூடிய சாட்சியாக இருப்பார்." (அல்குர்ஆன் - 2:143)

*அதாவது எப்படி இறைவனின் இறுதி தூதுர் முஹம்மத் (ஸல்) அவர்கள் நமக்கு வழிகாட்டும் அழகிய முன்மாதிரியாக இருந்தார்களோ, அதேபோல் நாம் ஏனைய மனிதர்களுக்கும் வழிகாட்டக் கூடிய சாட்சியாக - நடைமுறை விளக்கங்களாக இருந்திட வேண்டும். (இன்ஷா அல்லாஹ்)*

## நாம்தான் அந்த அழகிய சொல்லுக்கு சொந்தக்காரர்கள்

"எவர் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைத்து நற்செயல்களைச் செய்து, நிச்சயமாக நான் முஸ்லிம்களில் ஒருவன் என்று கூறுகின்றாரோ அவரை விட சொல்லால் அழகியவர் யார்?" (41:33 - அல்குர்ஆன்)

## இந்த இலட்சியப் பணியைச் செய்தால்

*அளவிலா நற்கூலிகளை அல்லாஹ் அள்ளி வழங்கிடுவான். இதனை இறைவனின் தூதுர் (ஸல்) அவர்கள், இப்படி வாக்களித் தார்கள்.*

"உங்கள் வழி ஒருவனுக்கேனும், அல்லாஹ் நேர்வழியை வழங்கிடுவானேயானால், அது உங்களுக்குக் கிடைக்கும் சிறந்த சிகப்பு ஒட்ட கங்களை விட மேலானதாகும். (புகாரீ - 4210)

## இந்தப் பணியை செய்யத் தவறினால்

*முதலில் அல்லாஹ்விடம், இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிட வேண்டும்.*

"அல்லாஹ்விடமிருந்து தன்பால் வந்திருக் கும் சாட்சியங்களை மறைப்பவனைவிட அநியா யக்காரன் யார்?" (அல்குர்ஆன் - 2:140)

*அடுத்து இதர மதங்களைப் பின்பற்றுவோர், அவர்கள் மார்க்கத்தை நோக்கி நம்மை அழைப்பார்கள்.*

"அவர்களுக்கு உங்கள் மீது வாய்ப்புக் கிடைத்தால், அவர்கள் உங்களுக்கு விரோதி களாகி யுத்தங்களையும், தம் நாவுகளையும் உங்களுக்குத் தீங்கிழைப்பதற்காக உங்கள் பால் நீட்டுவார்கள், தவிர நீங்களும் காஃபிர் களாக வேண்டும் என்று பிரியப்படுவார்கள்." (அல்குர்ஆன் - 60:2)

## எச்சரிக்கை


*இன்னும் அல்லாஹ் எச்சரிக்கின்றான்*

அறிந்துகொள்க! அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யுமாறு அழைக்கப்படும் கூட்டத் தினர் நீங்கள். ஆனால், உங்களில் கஞ்சத்தனம் உடையோரும் இருக்கின்றார்கள். ஆனால் எவன் கஞ்சத்தனம் செய்கின்றானோ அவன் தன் ஆத்மாவுக்கே கஞ்சத்தனம் செய்கின்றான். - அல்லாஹ் எந்தவித தேவையுமற்றவன். நீங்களோ தேவையுடையவர்களாக இருக்கின் றீர்கள். எனவே சத்தியத்தை நீங்கள் புறக்கணிப் பவர்களாக இருப்பீர்களாயின் உங்களல்லாத வேறு ஒரு சமூகத்தை அவன் கொண்டு வருவான். பின்னர் உங்களைப் போன்று அவர்கள் இருக்கமாட்டார்கள்.

(அல்குர்ஆன் - 47:38)


இப்போது பரபரப்பான

விற்பனையில்




விலை ரூ. 30 மட்டுமே

வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,

சென்னை - 600 001.

தொடர்ப்புக்கு : 8148129887

# எமது தாஃவா முயற்சிகள்...

**வா**ழும் முஸ்லிம்களின் சார்பில் - இஸ்லாத்தை மக்களிடையே கொண்டு செல்வதற்குப் பல்வேறு வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றோம். அவற்றை சுருக்கமாக பட்டியலிடுகின்றோம்.

**களப்பணிகளின் விளக்கம் உள்ளே...!**

1) இஸ்லாத்தை மக்களுக்கு விளக்கிச் சொல்லும் (தாஃவா) சுற்றுப் பயணங்கள்.

2) இஸ்லாத்தையும் இதர கொள்கைகளை யும் ஒப்பாய்வு செய்யும் கருத்தரங்கங்கள்.

3) இளைய சமுதாயத்தை (தாஃவா) செய்ய தயார் செய்யும் பயிலரங்கம்

4) பெருநாள் சந்திப்புகள் மூலம் சகோதர சமுதாயத்தவர்களுக்கு இஸ்லாத்தைச் சொல்ல, சிறப்பான விருந்து நிகழ்ச்சிகள். அதில் இஸ்லாத்தை அறிமுகம் செய்தல்.

5) திருக்குர்ஆன் தமிழ் மொழிப் பெயர்ப்பு களின் இலவச விநியோகம்.

6) இஸ்லாத்தின் மடக்கோலைகள் விநியோகம்

7) இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் சிரிய / பெரிய இலக் கியங்கள் வெளியிடுதல்.


8) நூல் வெளியீடு / அறிமுக நிகழ்ச்சிகள் என விவாத அரங்குகள்.

9) இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் இலக்கி யங்களை இலவசமாக விநியோகம் செய்வது.

10) நாங்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றோம்? என்ற வினா, விடையாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் வாழ்க்கை வரலாற்றை இலக்கியங்களாக வெளியிடுவது.

11) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் பிரச்சனைகளில் உதவி

## தாஃவாவின் வெற்றி!






**இ**ஸ்லாம் ஆட்சி அதிகாரத்தில் இருந்த போதும், இல்லாத போதும் முஸ்லிம்கள் வென்ற போதும், வெற்றி பெற்றிடாத போதும், இஸ்லாத்தைத் தொடர்ந்த பிரச்சாரம் செய்து கொண்டிருந் தவர்களின் முயற்சிகளால்தான்,

இன்று இந்தப் பூமிப்பந்தில் இஸ்லாம் விரிந்து வியாபித்து நிற்கின்றது என்றால் அதற்கான காரணங்கள் பலப்பல. சமூகக் காரணங்கள், அரசியல் காரணங்கள், மதம் என்ற அடிப்படையில் அமைந்த காரணங்கள் எனப் பலவும் உண்டு! இவற்றுள் எதுவந்த போதும், நிற்காமல் நிறுத்தாமல் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்த இயக்கங்களே தலையாயக் காரணம். இவர்கள் முஹம்மத் (ஸல்) அவர்களின் முன்மாதிரியை அப்படியே பின்பற்றி, அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து மக்களை இஸ்லாத்தில் இணைத்துக் கொண்டே இருந்தார்கள்.

- From Preaching of islam - By T.W.Arnold

## தாஃவா சுற்றுப்பயணங்கள்

அண்மைக்காலங்களில் நாங்கள் தலீத் பெருங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் நடத்திய தாஃவா நிகழ்ச்சிகளில், தலீத் இளைஞர்கள் பெருவாரியாகக் கலந்துகொள்வது குறிப்பிடத் தக்கது. அவர்களிடம் ஓர் விடுதலை ஏக்கத் தையும் கண்டோம்.

12) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை முஹல்லாக்களோடு இணைத்திட ஆவன செய்வது.

13) மால்கம்-X மாதம் / கூரியூர் ஜின்னா ஷஹீத் நாள் என ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்காக இஸ்லாத்தைத் தீர்வாகச் சொல்லும் பொதுக் கூட்டங்கள் / அரங்கக் கூட்டங்கள்.

14) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களின் நிலைமையை அறிய கள ஆய்வுகள்.

15) திருமண உதவிகள் / பிரசவ உதவிகள்

16) இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர் களுக்காக கல்விக் கூடங்கள்.

17) பிற மாநிலங்களில் தாஃவா

18) பிற மொழிகளில் தாஃவா இலக்கியங்கள்

19) உலக அளவில் நமது தாஃவா இலக்கியங்கள்.

இன்னும் பல....

இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் நிகழ்ச்சியாகவே நின்று விடாமல், அவை, சகோதர சமுதாயத்தவர்கள் இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் கொண்டுள்ள ஐயங் களை விளக்கி அவர்களை இஸ்லாத்தோடும், முஸ்லிம்களோடும் இறுகப்பிணைக்கின்றன.

இந்த சந்திப்பு நிகழ்ச்சியில் கலந்து கொள்பவர்கள் அனைவருக்கும், இஸ்லாத்தை அறிமுகம் செய்திடும் இலக்கியங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

# பெருநாள் சந்திப்பு நிகழ்ச்சி








# கிராமங்கள் தோறும் தாஃவாவும் காவல் துறையும்

# திருப்பூர் அவிநாசியில் தாஃவா கருத்தரங்கம்




இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பெரும் பணியில் நாங்கள் எதிர் கொண்டுவரும் சோதனைகள் ஏராளம்.

நண்பர்களோ, நல்லவர்களோ, எந்த ஆட்சியாளருக்கும் இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணி என்பது ஏதோ ஒருவித திகட்டலை கொடுக்கின்றது.

பாசிசம் தலை தூக்கிய இன்றைய காலக்கட்டங்களில் நிர்வாக இயந்திரத்திலும், ஆங்காங்கே பாசிஸ்ட்டுகள் ஊடுருவி விட்டார்கள். அத்தகையதொரு இடமாகவே அவிநாசி இருந்தது. அவிநாசியில் ஒடுக்கப் பட்ட மக்களின் அமைப்பாகிய ஆதி தமிழர் பேரவையும் நமது தாருல் இஸ்லாமும் இணைந்து தாஃவா நிகழ்ச்சி ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தோம். இதற்காக, வழக்கம் போல் திருமண மண்டபம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தோம்.

அந்தப் பகுதி காவல்துறையினர் அந்த திருமண மண்டபத்தின் உரிமையாளர்களை மிரட்டியதால் நிகழ்ச்சி ரத்தாகும் நிலை. சில முக்கியஸ்தர்களும் பிரபல்யங்களும் - வழக்கறிஞர்களும், நமக்காக காவல்துறை யினரிடம் பேசியபோது, "இவர்கள் எல்லோ ரையும் இஸ்லாத்திற்குக் கொண்டு சென்று விட்டால் எப்படி?" எனக் கேட்டிருக்கின்றனர்.

இதனால் பின்னர் காவல்துறையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத இடத்தில் நடத்தி னோம், மண்டபத்திற்கு வர இருந்த மக்களை, அந்த புது இடத்திற்கு சிறப்பு ஊர்திகள் வழி அழைத்து வந்தோம். பெருவாரியான பேச் சாளர்களும், சகோதர சமுதாயத்தைச் சார்ந்த வர்களும் திரளாகக் கலந்துகொண்டார்கள். அல்ஹம்துலில்லாஹ்!

இஃதோர் சிறந்த கருத்தரங்கமாகவும் திகழ்ந்தது.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் நூல்கள் இலவசமாக வழங்கப் பட்டன.

# தாஃவா சுற்றுப் பயணங்கள்



அன்பகம், கும்பகோணம் தாஃவா சுற்றுப் பயணத்திற்கான சொந்த ஊர்தி

தாஃவா சுற்றுப் பயணங்கள் என்பவை கிராமங்களுக்குச் சென்று இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பயணங்களாகும்.

1980-இல் தொடங்கி வருடந்தோறும் நூற்றுக் கணக்கான மக்களைக் கிராமங்களில் சந்தித்து வருகின்றோம். அவர்களுக்கு இஸ்லாத்தை எடுத்துச் சொல்லி இஸ்லாத்தின் பக்கம் அழைக் கின்றோம். படிக்க முடிந்தவர்களுக்கு இஸ் லாத்தை அறிமுகப்படுத்திடும் இலக்கியங்களை யும் இலவசமாக விநியோகித்து வருகின்றோம்.


இதுவரை பேருந்துகளிலும், வாடகை கார்களிலும் பயணம் செய்து, கிராம மக்களைச் சென்றடைந்து இஸ்லாத்தை எடுத்துச்சொல்லி வந்தோம். சந்திக்க வேண்டிய சிரமங்கள் பலப் பலவாக இருந்தன. சொந்த வாகனம் இல்லாதது மிகப் பெரியதொரு குறையாக இருந்தது. குறித்த நேரத்தில் எதையும் செய்ய முடியாதவர்களாக இருந்தோம். அல்லாஹ்வின் மிகப்பெரிய கருணையினால் இந்த வருடம் இந்தத் தாஃவா சுற்றுப் பயணங்களுக்கென ஒரு சொந்த வாகனத்தை அல்லாஹ் அருளச் செய்தான்.

இந்த சொந்த வாகனம் வந்த பின்னர் நமது தாஃவா பயணங்கள் விறுவிறுப்படைந்துள்ளன. அத்தோடு நாம் பல தூரத்துக் கிராமங்களையும் விரைவில் சென்றடைந்து விடுகின்றோம்.

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே!

இதனால் அல்லாஹ் நம் மூலம் ஹிதாயத்தை வழங்குபவர்களின் எண்ணிக்கையையும் அதிகப்படுத்தியுள்ளான். இந்தத் தாஃவா சுற்றுப் பயணங்கள் ஒரு பெரும் உண்மையை நமக்கு உணர்த்தின அது,

## உலக அளவில் நமது தாஃவா இலக்கியங்களின் தாக்கம்




ஹஜ்ஜுக்கு சென்று வந்த சிலர் நமக்கோர் செய்தியைச் சொன்னார்கள். அது, அங்குள்ள தாஃவா மையத்தில், நமது டிரஸ்டின் தாளாளர் இலக்கியச் சுடர் மு.குலாம் முஹம்மத் அவர்கள், தனது மொழியாக்கப் பயணத்தின் தொடக்கத்தில் மொழி பெயர்த்த இஸ்லாம் ஓர் அறிமுகம் என்ற நூல் இரண்டு பாகங்களாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது என்பதே அந்தச் செய்தி.

மால்கம்-X என்ற நூலை நமது விற்பனை நிலையங்களில் பார்த்த சில ஆப்பிரிக்க, அமெரிக்கர்கள் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் ஒருங்கே கைவரப் பெற்றவர்களாக நம்மைப் பாராட்டினார்கள்.

# கைபர் போருக்கு படையை அனுப்பிய பெருமானார் (ஸல்) அவர்கள் போருக்கு முன் தாஃவாவைச் செய்யச் சொன்னார்கள்

நபிமொழி 4210, புகாரி-யில் இப்படி இடம் பெறுகின்றது.

ஷஹல் பின் சாஅத் (ரழி) (அல்லாஹ் அவர்களைப் பொருந்திக் கொள்வானாக) பின்வரும் நிகழ்வை கூறுகின்றார்கள்.

கைபரின் நாளில், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள். நாளை நான் இந்தக் கொடியை ஒருவரிடம் கொடுப்பேன். அவருடைய கைகளின் வழி அல்லாஹ், நமக்கு வெற்றியைக் கொடுப்பான். அவர் அல்லாஹ்வையும் ரசூல் (ஸல்) அவர்களையும் நேசிப்பவர். அவரை அல்லாஹ்வும் ரசூலும் நேசிக்கிறார்கள் என்றார்கள்.

அங்குள்ள மக்கள் யாருடைய கைகளில் அந்தக்கொடி கொடுக்கப்படும் என வியந்த வண்ணம் இரவைக் கழித்தார்கள்.

காலையில் மக்கள் இறைவனின் தூதர் (ஸல்) அவர்களிடம் விரைந்தார்கள். அவர்களில் ஒவ்வொரு வரும் அந்தக் கொடியை பெற்றிடலாம் என்ற நம்பிக்கையில் நின்றார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலீ இப்னு அபூதாஃலிப் எங்கே? எனக் கேட்டார்கள். இதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே, அவர்கள் கண் நோயில் அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்." எனப் பதில் தந்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அவரை அழைத்து வர ஆளனுப்புங்கள் எனச் சொன்னார்கள்." அலீ (ரழி) அவர்கள் அழைத்து வரப்பட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அவருடைய கண்ணில் உமிழ்ந்தார்கள். அல்லாஹ்விடம் துஆச் செய்தார்கள். அதனால் அலீ (ரழி) அவர்கள் குணமடைந்தார்கள். அவர் கண் நோயால் அவதிப்பட்டார்கள் என்பதே காணாமற் போய்விட்டது.

பின்னர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கொடியை அலீ (ரழி) அவர்களிடம் கொடுத்தார்கள். அலீ (ரழி) அவர்கள் "அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்களும் நம்மைப்போல் ஆகும் வரை நான் அவர்களுடன் போரிடுவேன்" என்றார்கள்.

அதற்கு இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் "செல்லுங்கள் அவசரப்படாதீர்கள் அவர்களின் பூமியில் நுழைந்தவுடன் அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளச் சொல்லி அழையுங்கள். அவர்களிடம் அவர்கள் அவசியம் கடைபிடிக்க வேண்டிய அல்லாஹ்வின் உரிமைகளைப் பற்றிச் சொல்லுங்கள். காரணம் உங்கள் வழி ஒரு தனி மனிதனுக்கேனும், அல்லாஹ் நேர்வழியை வழங்கினால், அது உங்களுக்குக் கிடைக்கும் சிவந்த ஒட்டகங்களை விட சிறந்ததாகும்." என்றார்கள்.

## ஆக எதிலும் முதலில் தாஃவா

**இந்தத் தாஃவாவை சமுதாயத்தின் சார்பில் 40 ஆண்டுகளாக இடைவிடாமல் செய்து கொண்டிருக்கும்,**

**தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்-க்கு தாராளமாக நிதி உதவி செய்யுங்கள், அல்லாஹ்விடம் அளப்பறிய நற்கூலிகளைப் பெறுங்கள்..**

# இந்தியாவிற்குள் இஸ்லாம் வந்தபோது!


இந்தியாவிற்குள் இஸ்லாம் வந்த போதுஇங்குள்ள மக்கள் அடைந்த நன்மைகளை எழுதி மாளாது.

சாதிய அடக்குமுறைக்கு சம்மட்டி அடி விழுந்து பரவலாக இருந்த ஜாதிய அடுக்குமுறை, ஓர் அடிமை முறையாகவே இருந்தது. தீண்டாமை - மனிதனை மனிதன் தொட்டால் தீட்டு - பாவம் என்ற நிலையோடு நிற்கவில்லை. அதையும் தாண்டி ஒரு பொருளாதார சுரண்டலாகவும் அடிமை தொழிலை மட்டுமே இங்குள்ள பூர்வ குடிகள் செய்திட வேண்டும், அவர்கள் எந்த நிலை யிலும் சொந்தமாகத் தொழில் தொடங்கி விடக்கூடாது என்ற நிலையெல்லாம் இருந்தது.

இஸ்லாம் அன்றளவும் இந்தியாவில் அறிமுகமாகி இருக்காத இந்தியாவின் பூர்வகுடிகள் கண்டிருக்காத ஒரு சமத்துவத்தை, சகோதரத் துவத்தை இந்தியாவிற்குள் அறிமுகப்படுத்தியது.

இந்த சமத்துவத்திற்கு அடித்தளமாக மனிதர்கள் ஓர் ஆணிலிருந்தும், ஒரு பெண்ணிலிருந்தும் பிறந்தவர்களே! பின்னர் அவர்கள் பூமியெங்கும் பல்கிப் பரவினர். அதனால் அகிலமெங்கும் வாழும் மனிதர்கள் அனைவரும் ஒரு தாய், தந்தையின் பிள்ளைகள் சகோதரர்கள். அதனால் சமமானவர்கள் எனக் கூறிற்று.

இந்தத் தத்துவத்தால் கவரப்பட்ட மக்கள் அணி அணியாக இஸ்லாத்தை ஏற்றார்கள். இங்குள்ள அடிமை தளைகளை உடைத்தெறிந் தார்கள். இதனால் இஸ்லாம் இந்தியாவில் வேகமாக பரவியது.

# மடக்கோலைகள் - 'வாழ்வின் நோக்கம்'

அதீத வேகத்தோடு மனிதன் இயங்குகின்றான். சரியாக உணவுண்ணக் கூட நேரமில்லை. சம்பாதிக்கின்றான். சில பல நேரங்களில், சாதிக்கின்றான். ஆனால், இந்த உலகில் நாம் ஏன் வாழுகின்றோம். மரணம் என்றொன்று நம்மையும் பிடிக்குமே! மரணம் வரைதான் வாழ்க்கையா? இல்லை, அதற்கு மேலும் உண்டா? என்பனவற்றை சிந்திக்க தவறி விடுகின்றான்.

உண்மையைச் சொன்னால் இந்த உண்மைகளின் பக்கம் அவன் தன் கவனத்தையே திருப்பிட இயலுவதில்லை. நேரமில்லை.

யதார்த்தங்கள் எதிர்படும்போது மலைக்கின்றான். அதனால் அவனது கவனத்தை வாழ்வின் நோக்கத்தை நோக்கித் திருப்பி விட வேண்டிய திருக்கின்றது.

இந்த அரிய பணியை நாம் வெளியிட்டுள்ள வாழ்வின் நோக்கம் என்ற மடக்கோலை தாராளமாக செய்தது, சாதித்தது. அல்ஹம்து லில்லாஹ்.

தங்களுடைய வேகமான வாழ்க்கையினூடேயும் நாம் தந்திடும் “வாழ்வின் நோக்கம்“ என்ற சிற்றேட்டை படித்தார்கள். ஏனெனில் அது அவர்களை நின்று சிந்திக்க வைத்தது.

இந்த சிற்றேட்டில் “இறைவன் உங்களுக்காக அருளிய வாழ்க்கை வழிகாட்டுதலை அறிந்திட வாசியுங்கள் அல்குர்ஆன்-ஐ. தமிழாக்கம் இலவசமாகவே அனுப்பித் தருகின்றோம் எனக்கூறி அவர்களின் கவனத்தை அல்குர்ஆனின் பக்கம் திருப்புகின்றோம்.

என்ன ஆச்சர்யம்! அல்குர்ஆனை வாங்குகின்றார்கள், படிக்கின்றார்கள், பலர் இஸ்லாத்தையும் ஏற்றிருக்கின்றார்கள். அவர்களுக்கு நேர்வழியை நல்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

வாழ்வின் நோக்கம் என்ற இந்த மடக்கோலைகளை லட்சக்கணக்கில் விநியோகித்துள்ளோம். இன்னும் விநியோகித்து வருகின்றோம். (மாஷாஅல்லாஹ்)

அல்லாஹ்வின் அழகியத் திருப்பெயரால்

**வாழ்வின் நோக்கம்**

இன்றைய உலகம் வேகமாக ஓடிக் கொண்டிருக்கின்றது. மனிதனும் அதன் ஓட்டத்திற்கு ஈடு கொடுத்து ஓடிக் கொண்டிருக்கின்றான். நிறைய சாதித்திருக்கின்றான்.

இன்னும் சாதிக்க சளைக்காமல் உழைக்கின்றான். ஆனால் சில அடிப்படை விஷயங்களைப் பற்றி சிந்திக்க மறந்து விட்டான்.

அவை,

**நாம் எதற்காக படைக்கப்பட்டோம்?**

**எங்கிருந்து வந்தோம்?**

**மரணம் ஒரு நாள் நம்மை பீடித்துக் கொள்ளுமே!**

**அதன்பின் நாம் எங்கே செல்வோம்?**

என்பவை.

## திருக்குர்ஆன் இலவச விநியோகம்



“அல்லாஹ்வின் அழகிய வழிகாட்டுதல்கள் அனைவருக்கும்.

**மனிதன் இந்த உலகில் எப்படி வாழ்ந்திட வேண்டும்? என்பதை விளக்கிச் சொல்லும் அல்லாஹ்வின் அறுதி வேதமே அல்குர்ஆன். இது மனிதர்கள் அனைவருக்காகவும் அருளப்பட்ட வேதம். இதனை அறிந்திட அவாவுறுவோர், தங்கள் முகவரியுடன் நமது அலுவலகத்திற்கு எழுதவும். அல்குர்ஆன் மற்றும் தபால் செலவு இலவசம்''**

**இந்த இலவச விநியோகம் முஸ்லிம்களுக்கில்லை.**

இப்படி ஓர் அறிவிப்பை நமது பத்திரிகை வழியாகவும், இதர ஊடகங்கள் வழியாகவும் அடிக்கடி செய்து வருகின்றோம். நாம் விநியோகிக்கும் இலவச மடக்கோலைகளிலும் இந்த அறிவிப்பு இடம் பெறுகின்றது. இந்த இலவச விநியோகத்தை சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் நன்றாகவே பயன்படுத்தி வருகின்றார்கள். வருடந்தோறும் 100 முதல் 120 திருக்குர்ஆன் பிரதிகள், இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

**இதனை படிக்கின்ற சிலர் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். அல்லாஹ்வே நேர்வழியின்பால் மக்களை ஈர்ப்பவன். புகழுக்குரியவன்.**

# சென்னை முழுவதும் சாலையோர தாஃவா அழைப்பு பணி






சென்னை முழுவதும் தாவா அழைப்பு பணியில் ஆர்வமுள்ளவர்களுடன் இணைந்து அழைப்புப் பணியை மேற்கொண்டு வருகின்றோம். திருக்குர்ஆன் பிரதி மாற்று மத சகோதரர்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படுகிறது.

# முக்கியப் பிரமுகர்களுக்கும் இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் நூல்கள் இலவசமாக...





இன்றைய நாள்களில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும், ரமழான் மாதத்தில் இஃப்தார் நிகழ்ச்சிகளை நடத்துகின்றார்கள். நாமும் அழைக்கப்படுகின்றோம். அங்கெல்லாம் இஸ்லாத்தை அறிமுகம் செய்யும் இலக்கியங்களை கட்சித் தலைவர்களுக்கும், குழுமும் பிரபல்யங்களுக்கும் வழங்கி வருகின்றோம்.



# நூல் வெளியீடு மற்றும் தாஃவா பயிலரங்கங்கள்

1.9.2019

இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் தலையாயப் பணியை, கடமையை நிறை வேற்றிட இளைஞர்கள் முன்வந்திட வேண்டும். உண்மையைச் சொன்னால் இந்த மகத்தான இலட்சியத்தை அவர்கள், தங்கள் இலட்சியமாக ஆக்கிட வேண்டும். இந்த இலட்சியத்தின் பக்கம் அவர்களைத் திருப்பியாக வேண்டும். இதற்காக, அதாவது மக்களை இருளிலிருந்து வெளிச்சத் திற்குக் கொண்டு வந்திடும் இந்த இலட்சியத் திற்கு இளைஞர்களைத் தயார் படுத்திடும் பட்டறைகளே இந்தத் தாஃவா பயிலரங்கங்கள்.

இதில் இஸ்லாத்தை ஏனையோருக்கு எடுத்துச் சொல்வதில், இளைஞர்களிடையே நிலவி வந்த தொடக்க கால தயக்கத்தை போக்குகின்றோம். இஸ்லாத்தை ஏனையோருக்கு எப்படி நளினமாக எடுத்துச் சொல்வது என்பதைக் கற்று தருகின் றோம். இதில் 3 அல்லது 4 மணி நேர நடை முறைப் பயிற்சியும் தருகின்றோம். இதர மாற்றுக் கொள்கையைச் சார்ந்த சகோதரர்களை எப்படி எதிர்கொள்வது என்பதற்கான கொள்கை விளக்கங்களையும் தருகின்றோம்.

இதில்;

1. **இஸ்லாமும் - கம்யூனிசமும்**
2. **இஸ்லாமும் - திராவிடக் கொள்கைகளும்**
3. **இஸ்லாமும் - மக்களாட்சியும்**
4. **இஸ்லாமும் - மதச் சார்பின்மையும்**
5. **இஸ்லாமும் - முதலாளித்துவமும்**
6. **இஸ்லாமும் - உலகிலுள்ள இதரக் கொள்கைகளும்**
7. **இஸ்லாமும் - விஞ்ஞானமும்**
8. **ஃபாசிசத்தின் சதியும் - சூழ்ச்சியும்**

என்ற தலைப்புகளில் மாணவர்களுக்கு முழுமையான பயிற்சி தரப்படுகின்றது. இந்தப் பயிலரங்கங்கள் நம்மால் கடந்த 26 ஆண்டுகளாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்தப்பட்டு வருகின்றன. பயிற்சி பெற்ற பல இளைஞர்கள் இன்று தாஃவா களத்தில் பீடு நடைபோட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.



# இஸ்லாத்தை ஏற்பவர்கள் மீது இட்டுக்கட்டப்படும் வழக்குகள்

கடந்த 39 ஆண்டுகளாக நாம் சந்தித்த வழக்குகள் ஏராளம்...

*2004-ஆம் ஆண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதற்காகவே சிறை பிடிக்கப்பட்ட 18 பேர் கொலைக் குற்றம் சாட்டப்பெற்று சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அங்கு நடந்த ஒரு கலவரத்தில் சிலர் இறந்ததைப் பயன்படுத்தினர். இவர்கள் அனைவரும் அன்றைய மதுரை மாவட்டம் கண்ட மன்னூர்-ஐ சார்ந்தவர்கள்.*

*ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருந்தவர்கள் ஆதிக்க சாதியினருக்கு அழுத்தமாகத் துணை நின்றார்கள். இதனால் சிறை பிடிக்கப்பட்ட அந்த மக்களுக்காக நீதி மன்றங்களில் பிணை கேட்கக் கூட யாருமில்லை. முன்று ஆண்டுகளாக பிணை கேட்க ஆளில்லாத தால், சிறையில் வாடினர். அவர்களின் குடும்பங்கள் வறுமையில் சிக்கித் தவித்தன.*

*இந்தச் செய்தி நாங்கள் அந்தப் பகுதியில், தாஃவா செய்து கொண்டிருக்கும்போது எங்கள் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டது. நாங்கள் அந்த வழக்குகளை எடுப்பது என்று முடிவு செய்தோம்.*

*முதலில் சிறையில் சென்று சிறைப்பட்டவர்களைச் சந்தித்து, உண்மையில் நடந்தவற்றையும், அவர்களின் நிலைமையையும் கண்டறிந்தோம்.*

*தொடர்ந்து 18 பேரின் பிணைக்காகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தோம். பிணை கிடைத்தது. அனைவரும் பிணையில் வெளியே வந்தனர். காலப்போக்கில் அங்கே ஒரு மஸ்ஜித்-ஐயும் உருவாக்கினோம். அல்ஹம்து லில்லாஹ்!*

## அடுத்த மிகப்பெரிய வழக்கு....

*கும்பகோணத்தில் நாம் நடத்தி வரும் அன்பகத்தில் கல்விக் கற்றுக் கொண்டிருந்த மாணவி 'முபீனாவின்' வழக்கு*

*இந்தச் சகோதரி தன்னிச்சையாக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர். இவருடைய பெற்றோர்களைக் கையில் வைத்துக்கொண்டு சங்கப் பரிவாரத்தினர் கும்பகோணத்தில் ஒரு பெரும் கலவரத்தை நிகழ்த்தினார்கள். காவல் துறையில் புகார் கொடுத்தார்கள். காவல் துறையினர் சகோதரியை அழைத்துச் சென்று அவரை இஸ்லாத்தை விட்டுவிடச் சொல்லி அவர்கள் பாணியில் பேசினார்கள். என்ன வந்தாலும் நான் இஸ்லாத்தை விட்டு வெளியே வர மாட்டேன் என்றாள் அந்த அன்பு சகோதரி.*

*மட்டுமல்லாமல், அவள் தன்னிடம் விசாரணை நடத்தியவர்களுக்கே இஸ்லாத்தை எடுத்துச் சொன்னாள்.*

*சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் சாலை மறியலில் ஈடுபட்டார்கள், அதனால் காவல் துறையைச் சார்ந்த எல்லா அதிகாரிகளும் அங்கு வந்து குவிந்தார்கள். மாவட்ட ஆட்சியரின் பார்வைக்கும், இது கொண்டு செல்லப்பட்டது. நம்மிடம் காவல்துறையினர் அந்தச் சகோதரியை ஒப்படைத்திட வேண்டும் எனக் கேட்டார்கள். உங்களிடம் ஒப்படைக்க முடியாது என்பதில் நாம் உறுதியாக இருந்தோம்.*

*பின்னர் இதே வேண்டுகோளை ஒரு நெருக்கடியாக கும்பகோணம் முஸ்லிம் முக்கியஸ்தர்கள் வழியாகக் கொடுத்தார்கள். நாம் அதையும் எதிர்கொண்டோம். அவர்களிடம் எங்கள் நிறுவனம், எங்கள் ஆலோசனைக் குழுவைத் தவிர வேறு யாருக்கும் கட்டுப்பட்டதல்ல. அது இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கான நிறுவனம். அதனால் அந்த சகோதரியை எந்த நிலையிலும், விட்டுக்கொடுக்க மாட்டோம் என உறுதியாக கூறிவிட்டோம். அவர்களும் அவர்களின் கடமை முடிந்தது என*

விட்டுவிட்டார்கள்.

**அதில் உயர் அதிகாரி ஒருவர் இப்படி ஒரு கேள்வியை எம்மிடம் வைத்தார். ‘‘உங்கள் கல்விக் கூடத்தில் நான்கு மாதம் வரைதான் கல்விக் கற்றுக் கொடுப்பீர்கள்.அதன்பின் அந்தப் பெண் அவளுடைய வீட்டுக்குத்தானே போக வேண்டும். அப்போது அவர்களுடைய பெற்றோர்கள் கைவிட்டு விட்டால் அந்தப் பெண் என்ன செய்வாள்?‘‘ எனக் கேட்டார்.**

நாம் அவரிடத்தில் மூன்று மாதங்கள் அவளுக்குக் கல்வியைக் கற்றுக் கொடுப்போம், பின்னர் அவளை ஏனைய மாணவிகளுக்குக் கல்விக் கற்றுக் கொடுப்பவளாக மாற்றுவோம் என்றோம்.

பின்னர் அவளுடைய சம்மதத்துடன் எங்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது வெளியில் தகுதி வாய்ந்த முஸ்லிம் ஒருவருக்கோ திருமணம் செய்து வைப்போம் என்றோம். இதில் அவர் திருப்தி அடைந்தார். அதன்பின்னர் அங்கு சாலை மறியலில் ஈடுபட்டவர்களைக் கலைந்து செல்லும்படி கேட்டார். அவர்கள் மறுத்தார்கள். நாங்களும் நீலப்புலிகளுமாகக் கலைத்திடவா எனக் கேட்டோம். இதனால் ஆத்திரமடைந்த அந்த அதிகாரி 'லத்தி' அடி தந்து அவர்களைக் கலைத்தார். தொடர்ந்து நமது கல்விக் கூடத்திலேயே கல்விக்கற்று முடித்தாள், திருமணமும் முடிந்தது. கணவனோடு வாழ்ந்திடச் சென்று விட்டாள்.

### ரஷிதா வழக்கில் நீதிமன்றத்தின் நீதி

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட இந்தப் பெண்ணுக்கு வக்காலத்து வாங்கி வந்தார்கள் சில சங்கப் பரிவாரத்தினர். கட்டாய மத மாற்றம், மூளைச் சலவை, கடத்தல் என்றெல் லாம் புகார் தந்தனர். இஸ்லாத்தை ஒருவர் ஏற்றுக் கொள்வது என்னவோ ஒரு பெரிய குற்றம் என்றுதான் ஒரு பிரம்மையை இந்துத் துவ பாசிஸ்ட்டுகள் உருவாக்கி வைத்திருந் தார்கள். இந்த அடிப்படையில் தான் சில நீதிபதிகளும் நடந்துகொண்டார்கள்.

எது எப்படியோ, காவல் நிலையத்தில் அதிகாரிகள் இப்படித்தான் நடந்துகொண் டார்கள். அதேபோல் அந்தக் கிராமத்து காவல் நிலையத்தில் அந்தப் பெண்ணின் மீது வழக்குத் தொடர்ந்தார்கள் இந்துத்துவ வாதிகளின் தூண்டுதலால்.

ஆனால் தாருல் இஸ்லாமைச் சார்ந்த சகோதரர்கள், அதனை சட்ட ரீதியாக எதிர் கொண்டார்கள். முடிவில் நீதிபதி அவர்கள், ஒரு பெண் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டார் என்றால் அவர் ஒன்றும் ஒரு கிரிமினல் குற்றத்தைச் செய்து விடவில்லை. அவருக்கு அதில் உரிமையுண்டு. அதனால் இதில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று கூறிவிட்டார்.

### ஷாஹின் :

இதேபோல் இப்போது அன்பகத்தில் ஆசிரியையாக இருக்கும் ஷாஹினின் வரலாறும் அவருடைய உரை ஒன்றும் யூடிப்இல் இருக்கின்றது. அதை கேட்கவும், அதில் பல பயனுள்ள தகவல்கள் அடங்கி இருக்கின்றன.

இந்த வழக்கில் ஷாஹின் அவர்களே நீதி மன்றத்தில் தன் கதையை வழக்கை எடுத்துச் சொன்னார். எதிர் தரப்பில் இந்துத் துவாவைச் சார்ந்த சுமார் 35 வழக்கறிஞர்களும், நமது தரப்பில் 10 வழக்கறிஞர்களும் ஆஜராகினார்கள்.

ஆனால், நீதிபதி அவர்கள் ஷாஹினின், வரலாற்றை அவரிடமே கேட்டதில் திருப்தி யடைந்தார். அவரை இஸ்லாத்தில் இருந்திட அனுமதித்ததோடு அவருக்குப் பாதுகாப்பும் தந்திட வேண்டும் என ஆணைப் பிறப்பித்து நமது தாருல் இஸ்லாம் சகோதரர்களிடம் ஒப்படைத்தார். அவர் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லி தன்னுடைய தோழியர் இருவரை இஸ்லாத்தில் இணைத்துள்ளார்.

அல்ஹம்துலில்லாஹ்!

## இது மதுரை உயர்நீதி மன்றத்தில் நாம், 2019-ஆம் வருடத்தில் நடத்திய நான்காவது வழக்கு

எல்லா வழக்குகளிலும், மதுரையைச் சார்ந்த வைகை சட்ட நிறுவனமே, நமக்கு உதவியது. அல்ஹம்துலில்லாஹ்! அவர்களுக்கு நன்றிகள் பல...

இப்படி எத்தனையோ வழக்குகள், விரிவஞ்சி அவற்றை இங்கே விட்டு விடுகின்றோம்.

வருடந்தோறும், இந்த வகையில் ஏராளமான தொகையைச் செலவு செய்திட வேண்டியதிருக் கின்றது. அல்ஹம்து லில்லாஹ்! வழக்குகளில் அல்லாஹ்வின் உதவியுடன் வெற்றியுடன் திரும்புகின்றோம். மாஷா அல்லாஹ்.

மதமாற்றத் தடைச் சட்டம்

# நாடார் சமுகத்தில் விழிப்புணர்வு

1998 முதல் 2004 வரை பாசிசம் இந்தியாவில் முதல்முறையாக மத்தியில் ஆட்சி செய்தது. அப்போது தேசிய அளவில் மதமாற்றத் தடைச் சட்டம் ஒன்றைக் கொண்டு வர முயற்சி செய்தது. ஆனால், மத சுதந்திரம் சம்மந்தமான சட்டங்களை இயற்றுவது மாநிலங்களின் உரிமை. இது மாநில பட்டியல் (State LIst-இல்) இருந்தது. அதனால் மத்தியில் ஆட்சியில் இருந்து கொண்டு ஒரு மத மாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவந்து விட இயலவில்லை.

ஆனாலும், பாசிச ஆட்சியின் தலைவர் வாஜ்பேயிக்கு ஓர் அரிச்சல் - தன் அரிப்பைப் போக்கிக்கொள்ள ஓர் அறிவிப்பை வெளியிட்டார். அந்த அறிவிப்பில், நாம் மத மாற்றம் பற்றி நாடு தழுவிய விவாதத்தை மேற்கொள்ளலாம் என்றார்.


3000 நாடார்கள் இஸ்லாத்தை. . . ?

1899 சிவகாசியில் நாடார்கள் கோவிலுக்குள் நுழைய முயன்ற போது உயர்சாதி இந்துக்களால் கடுமையாகத் தாக்கப்பட்டார்கள். பெரிய கலவரம் ஒன்றை உருவாக்கி விட்டார்கள். கலவரத்தில் நாடார்கள் கடுமையாக பாதிக்கப் பட்டனர்.

இது சம்பந்தமாக இங்கிலாந்தில் உள்ள பிரைவி கவுன்சில் என்ற மன்னர் மாமன்றத்தில் வழக்கு நடந்தது.

நாடார்கள் கோவிலுக்குள் நுழையக் கூடாது என்றே அதிலும் தீர்ப்பு வந்தது.

இதன் பாதிப்பால் திருநெல்வேலியில் 3000 நாடார்கள் இஸ்லாத்தைத் தழுவினர்.

இது பணம் கொடுத்து மாற்றப்படவில்லை. இதற்கு முழுக்க இந்துக்களும், இந்து மதமும்தான் காரணம்.

- Etheno Graphic Notis to South India
by Edgar Thurston.

லஜபதி ராய்

வெளியீடு
வேர்கள் பதிப்பகம்
52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்புக்கு : 8148129887

விலை
ரூ. 10.00

## நாடார் வரலாறு கறுப்பா..? காவியா...? - தி.லஜபதிராய்

இந்த நூலின் நோக்கம் வரலாற்றை மீள் பதிவு செய்வது மட்டுமே மாறாக, குலத்தாழ்ச்சி, உலர்ச்சி சொல்வதன்று. சமீப காலமாக முக நூலிலும் பிற சமூக ஊடகங்களிலும் நேரடியாகவும் மறைமுகமாகவும், இஸ்லாமிய கிருஸ்தவ சமூகத்தினருடனும், பிற பட்டியலினை விளிம்பு நிலை மக்களுடனும், நிற்க வேண்டிய நாடார்களின் மன வோட்டத்தில் இந்து வலதுசாரி சிந்தனை மிகுதியாக இருப்பதைக் காணமுடிகிறது. இந்நிலையில் கடந்த காலத்தை திருப்பிப் பார்ப்பது மிகவும் அவசியமாகிறது.

*(நூலில் நூலாசிரியர் T.N.லஜபதிராய்)*

அப்போது நாம் நிறுவி நடத்திக் கொண்டிருந்த "விடியல் வெள்ளி" என்ற பத்திரிகையின் சார்பில் ஒரு விவாதத்தைத் தொடங்கினோம்.

அந்த விவாதத்தில் தமிழகமெங்கும் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டவர்களைப் பங்குபெறச் செய்தோம். கலந்துகொண்டவர்களின் கருத்துக்களை நமது விடியல் வெள்ளி மாதஇதழில் வெளியிட்டோம். அதில், மதுரையைச் சார்ந்த மூத்த வழக்கறிஞர், லஜபதிராய் அவர்கள் நாடார்கள் ஏன் மத மாறினார்கள் என்ற கட்டுரையை எழுதினார்கள். அது விழிப்

புணர்வை ஏற்படுத்தியது. ஜாதிக் கொடுமை களால் கோயில்களில் நுழைய முடியாத நிலையில், அவர்கள் அணுகிய நீதிமன்றங் களெல்லாம் நாடார்கள், இந்துக்களின் கோயில்களில் நுழைந்திட இயலாது என்று தீர்ப்பு வழங்கியது ஆங்கிலேய நீதிமன்றம், (லண்டன்) (Privy Council of England) வழங் கியத் தீர்ப்பில் விரக்தி அடைந்தார்கள் நாடார்கள். அதனால் 3000 நாடார்கள் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்பதை ஆதாரப்பூர்வமாக வெளியிட்டார்.

இதே கட்டுரையை நாம், "வைகறை வெளிச்சம்" மாதஇதழில் மீண்டும் வெளியிட்டி ருந்தோம். பின்னர் அதை நூலாகவும் வெளியிட் டோம். அதன் பெயர் "நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்" இந்த நூல் 8 பக்கங்களைக் கொண்டதாக இருந்தாலும், மிகவும் பயன் பயப்பதாக இருந்தது. நாடார் மக்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது.

மிகச்சிலர் "நாடார்கள் இப்போது, முன்னேறி இருக்கின்றார்கள். அதையும், நீங்கள் குறிப்பிட லாம்" என்றார்கள். நாம் வெளியிட்ட இந்தச் சிறிய நூல் தந்த உற்சாகத்தால், ஆசிரியர், மூத்த வழக்கறிஞர் லஜபதிராய் அவர்கள், அனைத்தை யும் தழுவியதொரு நூல் வெளியிட வேண்டும் என அவாவுற்றார். அதையே மிகப்பெரிய ஆய்வுக்குப் பின் வெளியிடத் தயாரானார். தன்னிடம் வந்து குவிந்து நிற்கும் வழக்குகளில் வாதாடிக் கொண்டே இந்த ஆய்வையும் மேற்கொண்டார் நூலாகவும் தந்தார்.

அதுவே

## நாடார்கள் வரலாறு கறுப்பா..? காவியா..?

நாடார் பெருங்குடி மக்கள் ஏன் இஸ்லாத்தை ஏற்றார்கள் என்ற நூலை தடுக்க வேண்டும் என்பதற்காக அதனை வெளியிட்ட "வேர்கள் பதிப்பகத்தின்" காப்பாளர் மு.குலாம் முஹம்மத் அவர்கள் மீதும்,நூலாசிரியர் மூத்த வழக்கறிஞர் லஜபதிராய் அவர்கள் மீதும் தமிழ்நாடு தலைமைக் காவலர் அவர்களிடம் புகார்கள் தந்தார்கள். அதுபின்னர் முதல் தகவல் அறிக்கையாகவும் ('FIR' ஆகவும்) மாறியது. அதனை வழக்கறிஞர்,




நூலாசிரியர் லஜபதிராய் அவர்களே ஒன்று மில்லாமல் ஆக்கினார்கள்.

**- நாடார் மக்களுக்காக தன் வாழ்நாளைத் தந்து போராடிக் கொண்டிருக்கும் திருமகன் பாலபிரஜாதிபதி அவர்களிடம் இந்த நூலைத் தந்தோம். அவர் இந்த நூலில் வந்த தகவல்கள், அத்தோடு அவர்கள் மேற்கொண்ட ஆய்வுகள், அனுபவங்கள் இவற்றையும் இணைத்து அந்த மக்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்ள்.**

**அதன்பின் வழக்கறிஞர் லஜபதிராய் அவர்கள், CAA என்ற குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்தக் கூட்டங்களிலும், இதைக் குறிப்பிட்டார்கள்.**



# நீதிபதி ப. குலாம் முஹம்மது அவர்களின் இல்லத்தில் தாஃவா



*21-3-2020* அன்று நீதிபதி ப. குலாம் முஹம்மது (முன்னாள் கோபாலகிருஷ்ணன்) அவர்களின் இல்லத்தில் தாஃவா. அவரது மனைவியின் மறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சி

# 10-12-2019 அன்று அன்பகம் மதரஸாவில் சிறப்பு அழைப்பாளர் நிகழ்ச்சி



# அன்பகம் வழி தாஃவா

அன்பகத்தின் பணி இஸ்லாமியக் கல்வியை மட்டும் கற்றுக்கொடுப்பதோடு முடிந்துவிட வில்லை. அதை மைய மாகக் கொண்டு இஸ்லாமியப் பிரச் சாரங்களையும் செய்கின்றோம்.



அன்பகத்தில் ஒருநாள் தாஃவா நிகழ்ச்சி 16.02.2020

இப்படி மேற்கொள்ளப்படும் தாஃவாவில் பல்வேறு வழிமுறை களை மேற்கொள்கின்றோம். அதில் ஒன்று, ஓய்வு பெற்றவர்கள், சமூக விடுதலைக்காக உழைத்துக் கொண்டிருப்பவர்கள், இவர்களை எல்லாம் அழைத்துவந்து அவர்களிடம் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்வது பற்றியும், இஸ்லாத்தின் வழி இஸ்லாத்தை ஏனையோருக்கு எடுத்துச் சொல்வது பற்றியும் விவாதிக்கின்றோம்.

# (ரமழானில் விருந்து 12 பேர் கொண்ட ஆய்வரங்கம்)

இவர்களில் பலர் கடந்த 25 ஆண்டுகளாக நம்மோடு தாஃவா களத்தில் இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

புறச்சூழல்களால் அவர்கள் இஸ்லாத்தை ஏற்பது காலங்கடந்து போய்க் கொண்டிருக் கின்றது. அவர்களுக்கு அவ்வப்போது ஆறுதலையும், அறிவுரை களையும் வழங்கி வருகின்றோம்.

கலந்துகொள்பவர்களுக்கு நமது இலக்கி யங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இஸ்லாத்தின் பக்கம் அதிகமாக நெருங்கி வருபவர்களுக்கு இப்போது நாம் வழங்கிடும் நூல் சிக்கல் நாயக்கன்பேட்டையிலிருந்து மக்கா மாநகரம் வரை என்பதாகும்.

இந்நூல் நம்மோடு நீண்ட நெடுங்கால மாகத் (தாஃவா) களத்திலிருந்த கண்ணியத் திற்குரிய ஹாஜி சக்கரியா பாய் அவர்கள் எழுதியது. அவர்கள் இஸ்லாத்தை ஏற்றது முதல் பெருமானார் (ஸல்) அவர்கள் பிறந்து, தவழ்ந்து அரும்பாடுபட்ட அந்த பூமியில் (மக்கா மாநகரி லும், மதினா மாநகரிலும்) கால்பதிக்க வேண்டும், அந்த புனித இடங்களில் தொழுதிட



வேண்டும் என்ற உத்வேகங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

இறுதியில் அல்லாஹ் அவர்களின் ஆசையை நிறைவேற்றி வைத்தான். மக்கா மாநகரம் சென்று வந்தார்கள். அவர்களின் நினைவுகள், இளமைக் காலத் தீண்டாமைக் கொடுமைகள், அதற்கெதிராக அவர்கள் தொடுத்த போர்கள் பின்னர் இஸ்லாத்தை ஏற்று விடுதலை அடைந்தது, அனைத்தும் வெறும் பயணக் குறிப்பு அல்ல வரலாற்றின் மிக முக்கியமான ஒரு காலக்கட்டத்தின் பதிவுகளும் ஆகும். அந்த வரலாறு எங்கேயும் கிடைக்காது. காரணம் அது எங்கேயும் பதியப் படவில்லை. காரணம் அது தாழ்த்தப்பட்ட மக்களின் வரலாறு.



# அன்பகம்

## தாருல் உல்ஃபத் மதரசா

### அன்பகம் - இஸ்லாமியக் கல்விக்கூடம்

அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்)

நமது இஸ்லாமியப் பிரச்சார பெரும் பயணத்தில் எதிர்பட்ட அனுபவங்கள் ஏராளம்! களத்தில் நம்மோடு இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைத்துக் கொண்டிருந்தவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள் நடைமுறை வாழ்க்கையில் இஸ்லாத்தைச் செயல்படுத்திடும், பாடங்களையும் பயிற்சிகளையும் தந்திட சில கல்விக் கூடங்களை நிறுவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்கள்.

அவர்களின் ஆர்வமும் களத்தில் கனிந்த வெற்றிகளும் இதை வலியுறுத்தின. அதனடிப் படையில் தஞ்சை மாவட்டம், கும்பகோணத்தின் அருகாமையில் திருப்பனந்தாளில் 1989-இல் ஒரு கல்விக் கூடத்தைத் தொடங்கினோம்.

இந்தக் கல்விக் கூடம், இஸ்லாத்தின் எல்லாப் பகுதிகளையும் இஸ்லாத்தை ஏற்றவர் களுக்கு கற்றுத் தந்திடும் கலாச்சாலையாக மாறியது. தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை படிப்படியாக பெருகிற்று. இதனைப் பொறுத்துக் கொள்ளாத அரசு நிருவாகம், அந்த வீட்டின் உரிமையாளர் பெண்மணிக்கு நெருக்கடிகளைத் தந்தது. இதனால் அந்த வீட்டை காலி செய்திட வேண்டியதாயிற்று.

தொடர்ந்து 1993-இல் தேனி மாவட்டம், முத்துதேவன்பட்டிக்கு அந்த "அறிவகம்" இஸ்லாமியக் கல்விக்கூடத்தை மாற்றினோம். அங்குள்ள இணையற்ற இஸ்லாமியப் பிரச்சாரகர் ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்களின் வீட்டில் அதைத் தொடர்ந்தோம். மெத்த சிரமங்களை மேற்கொண்டு அங்கு







அன்பகம் மதரஸாவில் இஸ்லாத்தை ஏற்றவர்களுக்கு 15.03.2020 அன்று நடைபெற்ற திருமணம்



*4000 சதுர அடியில் சொந்தக் கட்டிடம் ஒன்றையும் நிர்மானித்தோம். அடுத்து இஸ்லாத்தை ஏற்றிடும் பெண்களுக்கு ஒரு கல்விக் கூடம் தேவைப் பட்டது. அதனை நெல்லை ஏர்வாடியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மானித்தோம். 2007ஆம் ஆண்டு சமுதாய போராளி டி.எம். உமர் ஃபாரூக் அவர்கள் நம் வாயிலாக இஸ்லாத்தை ஏற்றார்கள்.*

*இதே திருப்பனந்தாளில் தான் நாம் நமது முதல் இஸ்லாமியக் கல்விக் கூடமாம் அறிவகத்தை தொடங்கினோம். அன்று முதலே நமது இஸ்லாமியப் பிரச்சாரம் அங்கே மையம் கொண்டது. இதன் விளைவாக பலக் குடும்பங்கள் அங்கே இஸ்லாத்தை ஏற்றன. இஸ்லாத்தை ஏற்றக் குடும்பங்களுக்கு குடும்பத்தோடு மார்க்க அறிவைப் புகட்டிட ஒரு கல்விக் கூடம் தேவைப்பட்டது. அதுவே அன்பகம்.*

## அன்பகம் சந்தித்த சோதனைகள்?

*வாடகை கட்டிடத்திலேயே இயங்கிட வேண்டிய நிலை. மூன்று கட்டிடங்களுக்கு மாறிவிட்டோம். கடந்த சில வருடங்களாக மாணவர்கள் சேர்வது அதிகமாக இருந்த தால் ஒரு பெரிய கட்டிடத்திற்கு மாறி இருக் கின்றோம். ஒரு சொந்த கட்டிடத்திற்கு மாறிட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்ஷா அல்லாஹ் இறைவன் விரைவில் அதை உங்கள் வழி நிறைவேற்றி வைப்பான் என எதிர்பார்க்கிறோம்.*

*அன்பகத்தில் - இன்றளவும் இஸ்லாத்தை ஏற்றவர்கள் 1741 பேர் கல்வி கற்று சென் றுள்ளனர். இதில் 401 குடும்பமும் அடங்கும். 13 ஆண்டுகளாக இடைவிடாமல் நடந்து வருகின்றது.*

## அன்பகத்தில்

1) கல்வி காலம் மூன்று மாதங்களாகும்.

2) கல்வி கற்கும் காலம் முழுவதும் அனைத்து வசதிகளும் இலவசம் - உணவு, உடை, உறைவிடம்.

3) மருத்துவ செலவுகளும் இலவசம்.

4) ஆண்களுக்குக் கத்னா நமது செலவிலேயே தரமான மருத்துவ மனையில் நடத்தப்படுகின்றது.

5) இஸ்லாத்தை ஏற்கும் பெண்களுக்கு திருமண உதவிகளையும் செய்து தருகின்றோம்.

6) கர்ப்பிணி பெண்கள், இஸ்லாத்தை ஏற்றால், மகப்பேறு முதலான மருத் துவச் செலவுகள் எல்லாவற்றையும் ஏற்று, அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றோம். இதுவரை பத்து நிகழ்வுகள் நடந்துள்ளன.

7) இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்கள் சட்ட ரீதியான பிரச்சனைகளைச் சந்தித்தால் அதிலும் உதவி செய்து வருகின்றோம்.

8) பயங்கரமான நோயால் பீடிக்கப்பட்ட ஒரு பெண்ணுக்கு எமது அறக்கட்டளை யைச் சார்ந்தவர்கள் மாதம் ரூபாய் 17,000 வரை செலவு செய்து தேற்றி வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

9) அஃபிடவிட், அரசு கெசட்டில் பெயர் மாற்றம் அனைத்தையும் நமது செலவில் செய்து வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.

10) மாணவர்களின் திருக்குர்ஆன் ஓதுதல், மனனம், துஆக்கள் மனனம் என்பனவற்றிற்கு சிறப்பான கவனம் செலுத்தப்படுகின்றது.

11. கல்வி காலத்தில் ஒரு மாணவனுக்கு ஆகும் செலவு ரூபாய் 12,000, கத்னா ரூபாய் 3500. ஆகமொத்தம் 15,500 ஆகின்றது.


# தாஃவா

## எதிர் இலக்கியங்கள் - சவால்களும் சாதனைகளும்




நமது (தாஃவா) இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் பணியால் எல்லா சமுதாயத்தவர்களும் ஈர்க்கப்படுகின்றார்கள். ஆனால், இஸ்லாத்தின் எதிரிகள், தாழ்த்தப்பட்ட மக்களும், ஒடுக்கப்பட்ட மக்களுந்தான் இஸ்லாத்தில் அதிகமாக இணைகின்றார்கள் எனக் கருதுகின்றார்கள்.

ஏனெனில், அவர்களுக்குக் காலமெல்லாம் கிடைக்காமல் போன "மனிதன்" என்ற அந்தஸ்தும், சமத்துவமும், சகோதரத்துவமும் எளிதில் கிடைத்துவிடுகின்றது இஸ்லாத்தை ஏற்பதால். இது வரலாறு முழுவதும் நடந்து வருகின்றது. இதனால் இஸ்லாத்தின் எதிரிகள், இஸ்லாம் இந்த மக்களைச் சென்றடைவதற்கு



முன்னால், இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களை அவர்களின் இதயங்களில் விதைத்து விடுகின்றார்கள்.

நாம் கிராமங்களில் தாஃவா சுற்றுப் பயணங்களை மேற்கொள்ளும் போது, இந்தச் சதிகள் மிகவும் நன்றாக வெளிப்படுகின்றன. கிராமத்து மக்கள் நம்மை நோக்கி வீசும் கேள்விகளின் வழி அறிந்திட முடிகின்றது.

இந்தத் தவறான சிந்தனைகளையும், எண்ணங்களையும் நாம் தரும் பதில்கள் வழி களைந்து வருகின்றோம்.

ஆனால் இஸ்லாத்தின் எதிரிகள், இவற்றோடு தாங்கள் எதிரப்பை நிறுத்திவிடுவதில்லை. அவர்கள் இன்னும் ஒருபடி மேலே போய், எதிர் இலக்கியங்களையும் வெளியிடுகின்றனர்.

அவ்வாறு அவர்கள், எதிர் இலக்கியங்களை வெளியிட்டதில் மால்கம்-X என்ற மாலிக் அல்ஷாபாஸ் ஷஹீத் அவர்களின் வாழ்க்கை வரலாறும் ஒன்று. நாம் வெளியிட்ட மால்கம்-X நூலின் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டனர்.


நாம் இந்த நூலை டிசம்பர்-*1995*-இல் முதலில் வெளியிட்டோம். அதன்பின் பல மறு பதிப்புகள் வெளிவந்தன. இப்போது விரிவாக்கப் பட்ட ஐந்தாம் பதிப்பு வெளி வந்திருக்கின்றது.

இந்த நூலின் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள், என்பது மட்டுமல்ல, ஓரிரு இயக்கங்களும் - இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதை இலட்சியமாகக் கொண்டு தொடங்கப்பட்டன.

நூலைப் படித்தவர்கள் பலர், அதை மீண்டும், மீண்டும் பலமுறை படித்தேன் எனக் குறிப்பிட்டார்கள்.

இதையெல்லாம் அறிந்த இஸ்லாத்தின் எதிரிகள் எந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் மால்கம்-X அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால் இஸ்லாத்தை ஏற்று நிரந்தரமாக விடுதலை அடைந்தார்களோ, அதைத் திரித்தும் மறித்தும் எழுதினார்கள். மக்களிடம் தாராள மாகப் புழக்கத்தில் விட்டார்கள்.

மால்கம்-X அவர்கள் இஸ்லாத்தை ஏற்றபின், *16* ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்று


கருப்பாயி என்கிற நூர்ஜஹான்
கதை ஆசிரியர்
அன்வர் பாலசிங்கத்துடன் நேர் முகம்
டி.எம். உமர் பாரூக்
கள ஆய்வு
மு. குலாம் முஹம்மத், எம்.ஏ. இதழியல்
பதிப்பகம்

இஸ்லாத்தைப் பரப்பியதை மறைத்தார்கள்.

நாம் அவர்களிடம் கேட்டபோது நாங்கள் மத நீக்கம் செய்துதான் இலக்கியங்களை வெளி யிடுவோம் என்றார்கள். இலக்கியத் துறையில் உள்ள சாதாரண இங்கிதம் ஒருவருடைய வாழ்க்கை வரலாற்றை வெளியிடும்போது அதில் சில பகுதிகளை நீக்குவது என்பது ஆரோக்கியமான செயல் அல்ல.

இதைப்பற்றிக்கூட இஸ்லாத்தின் எதிரிகள் கவலைப்படுவதில்லை.

## கறுப்பாயி என்ற நூர்ஜஹான் - புதினம்

இஃது அன்வர் பாலசிங்கம் என்பவரால் எழுதப்பட்ட புதினம். இதன் மையப்பொருள் இஸலாத்தை ஏற்றுக்கொண்ட பெண்களுக் குத் திருமண மாவதில்லை. அதனால் அவர்கள் தற்கொலை செய்து கொள்கின்றார்கள் என்பதே!

இந்தக் கதையின், களமாக பழைய மீனாட்சி புரம், இப்போது ரஹ்மத் நகர் அமைகின்றது. இந்த ரஹ்மத் நகரில் / மீனாட்சிபுரத்தில்

மொத்த கிராமமும் 1982-ல் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டது. மொத்தக் கிராமமும் தீண்டாமைக் கொடுமையிலிருந்து விடுதலை அடைந்தது.

மீனாட்சிபுரம் ரஹ்மத் நகராக மாறியது. இந்தியாவை ஓர் உலுக்கு உலுக்கியது அன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, பாசிசத்தின் அகில இந்திய தலைவர்களுள் ஒருவரான, வாஜ்பேயி, தமிழக முதல்வர் எம்.ஜி.இராமச்சந்திரன், இப்படி எல்லோரும் இந்த மக்களை இஸ்லாத்திலிருந்து வெளியே கொண்டு வந்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொண்டார்கள். ஆனால் அந்த மக்கள் அசைந்து கொடுக்கவில்லை.

தேசியப் பாதுகாப்புச் சட்டம் முதல் தேச விரோத துரோகச் சட்டங்கள் வரை அந்த மக்களை நோக்கிப் பாய்ந்தன. அந்த மக்கள் விட்டுக் கொடுக்க வில்லை.



தனி சமய அந்தஸ்து கோரும் அய்யா பால பிரஜாதிபதி அடிகளாருடன் ஓர் சந்திப்பு 3-5-2019

ஆனாலும் இஸ்லாத்தின் எதிரிகள் விட்டுக் கொடுக்கவில்லை. தங்கள் உத்தியை வேறுபக்கம் திருப்பினார்கள். அந்த மக்களையும், அவர்களோடு சேர்த்து இஸ்லாத்தையும் கொச்சைப்படுத்திட முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

அணையுடைந்த வெள்ளமாய்ப் பாய்ந்த முயற்சிகளுள் ஒன்றுதான் கறுப்பாயி என்ற நூர்ஜஹான்.


இஸ்லாத்தை ஏற்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் தற்கொலை. காரணம், இஸ்லாத்தை ஏற்ற ஒரு குடும்பத்தின் ஒரே பெண்ணுக்குத் திருமண மாகவில்லை. இப்படிப் புனைந்துரைக்கப்பட்ட கதை ஒன்று நூல் வடிவம் ஆக்கப்பட்டு, பாசிச - இந்துத்துவ சக்திகளின் துணையோடு தமிழகத்தின் பட்டித் தொட்டிகளெங்கும் விநியோகிக்கப்பட்டு வந்தன.

இந்தப் புதினத்தின் சுழற்சி நமது பார்வையிலும் பட்டது. உண்மையைச் கண்டுவர மீனாட்சிபுரம் சென்றோம். கள ஆய்வு ஒன்றை மேற்க்கொண்டோம். அத்தனையும் பொய்யெனக் கண்டோம். கதையைக் கட்டிய அன்வர் பாலசிங்கத்தை நேருக்கு நேர் எதிர் கொண்டோம். அத்தனையும் பொய் என நிரூபித்தோம். அதனை பின்னர் நூலாகவும் தந்தோம். (எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே)

அதன்பின் அதன் சுழற்சி மிகவும் குறைந்தது. ஆனால், பாசிஸ்ட்டுகள் அந்த நாவலை ஆயிரக் கணக்கில் விநியோகித்து வருகின்றார்கள். அங்கெல்லாம் நாங்களும் நமது நூலை அன்வர் பாலசிங்கத்தின் கதை சுத்தப் பொய் என்பதை நிரூபிக்கும், நூலை இலவசமாக விநியோகித்து வருகின்றோம். அல்ஹம்துலில்லாஹ்!

கள ஆய்வு, நூலாக்கம், நூலின் இலவச விநியோகம், இவற்றிற்காக மிகப்பெரியதொரு தொகையைச் செலவிட்டுக் கொண்டிருக்கின்றோம்.






# அனைவரது கண்களையும் திறந்த தாஃவா நூல்

இறைவனின் இறுதித்தூதுர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறுதான் உலகில் அதிகமாகப் புழங்கிவரும் வாழ்க்கை வரலாறு.

ஆனால், இந்தத் தலைப்பில் இன்றளவும் ஒரு நூல் வந்ததில்லை. வேறு சொற்கள்பால் சொன்னால் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை இந்தப் பார்வையில் பார்த்தவர்கள் யாருமில்லை.

வரலாற்றாசிரியர் கரன் ஆம்ஸ்டிராங் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை இந்தப் பார்வையில் பார்த்ததற்கு நிகழ்காலப் பின்னணி ஒன்று உண்டு.

அமெரிக்காவில் நடந்த இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு (9/11)-க்குப்பின் (செப்டம்பர் -11, 2001-ஆம் ஆண்டில் நடந்த தாக்குதல்)

இஸ்லாம்தான் காரணம் என்றும், ஒரு பெரும் பிரச்சாரத்தைக் கட்டவிழ்த்து விட்டார்கள். சுருக்கமாக ஒரு இஸ்லாமோ ஃபோபியா (Islamophobia) என்ற இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்த்தார்கள்.

இந்நிலையில் வரலாற்றாசிரியர் கரன் ஆம்ஸ்ட்ராங் அவர்களுக்கு ஓர் இக்கட்டான நிலை.

ஏனெனில் அவர் ஏற்கெனவே பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை 1999-இல் எழுதி இருந்தார்கள். அந்த நூலின் பெயர் Muhammad a Bioagraphy of the Prophet - "முஹம்மத் - இறை தூதுரின் வாழ்க்கை" - இந்த நூலுக்காக அவர் மேற் கொண்ட ஆய்வில், எங்கேயும் தீவிரவாதத்தை முஹம்மத் (ஸல்) அவர்கள் போதித்ததாக இல்லை. ஆனால் 9/11 என்ற அமெரிக்காவின் இரட்டைக் கோபுர தாக்குதலுக்குப் பின் இஸ்லாத்தின் மீதும், பெருமானார் (ஸல்) அவர்கள் மீதும் இத்தகைய குற்றச்சாட் டுகள் வைக்கப்பட்டபோது மலைத்து நின்றார்.


தார்மீகமாக தனக்கோர் கடமை இருக் கின்றது. அது, முஹம்மத் (ஸல்) அவர்களுக்கும் தீவிரவாதத்திற்கும் எந்தச் சம்மந்தமுமில்லை என்பதைத் தெளிவுபடுத்துவதே. இதற்காக இன்னொரு ஆய்வை மேற்கொண்டார். அதில் இன்றைய உலகில் நடக்கும் தீமைகள் - அநீதிகள் - பாவங்கள், உரிமை மீறல்கள் இவை அழிக்கப்பட வேண்டும் என்றால் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களை இன்றைய உலகம் பின்பற்றிட வேண்டும் என முடிவு செய்தார். எழுதினார், நூலாகத் தந்தார். முஹம்மத் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி" என அந்த நூலுக்குப் பெயர் வைத்தார், பரப்பினார். இந்த நூலை தமிழ் கூறும் நல்லுலகம் பயன்பெறும் வகையில் நாம் தமிழில் தந்தோம்.

இங்கே இன்னொன்றையும், நம் மனதில் கொள்ள வேண்டும். அது, இன்றைய நாள் களில் முஸ்லிம்களில் சிலரும், இஸ்லாத்தின் எதிரிகளிடம் இஸ்லாம் காலாவதியாகிவிட்ட மார்க்கம் என்றும், இப்போதைக்கு நமக்கு வேறு வழிகாட்டுதல்கள் வேண்டும் என்றும்

பேசி வருகின்றார்கள். இவர்களுக்குச்சாட்டை அடியாக இந்த நூல் அதாவது கரன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் ஆய்வுப் பயன்படுகிறது.

இதனை மலிவு விலையிலும், படிப்பாளர்களுக்கும் படைப்பாளர்களுக்கும் இலவசமாகவும் தந்து வருகின்றோம். படித்தவர்கள், இந்த நூலின் கருத்துக்களைப் பரப்பி வருகின்றார்கள்.

'ரபிவுல் அவ்வல்' மாதம் முழுவதும், இதையே நமது தாஃவா அணியினர் முழு நேரப்பணியாகச் செய்தார்கள். அல்ஹம்து லில்லாஹ்.




ஒரு மாதத்திற்குள் இரண்டு பதிப்புகளைச் சந்தித்தது இந்த நூல். ●

# ஸகர் நேர நிகழ்ச்சியில் எதிர்காலம் இஸ்லாத்திற்கே என்று ஆற்றிய உரை







# இஸ்லாத்தை

## ஏற்றுக் கொண்டவர்கள் எப்படி வாழ்கின்றார்கள்?

### கள ஆய்வு

தாஃவா களம் - இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைக்கும் களம். தூர நோக்கோடும் தொலை நோக்கோடும் பார்த்திட வேண்டிய ஒன்று.

இந்த வகையில் நாம் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட தனி மனிதர்களும், குடும்பங்களும் எப்படி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்? என்பதை ஒரு கள ஆய்வு மூலம் வருடத்தில் குறையாமல் ஒரு முறையாவது கண்டு வருகின்றோம்.

அல்லாஹ்வின் மிகப்பெரிய கிருபையினால் அவர்கள் தொடக்க காலத்தில் எதிர் கொண்ட பிரச்னைகளிலிருந்து நிச்சயமாக வெளி வந்ததிருக்கின்றார்கள்.

முஸ்லிம் சமுதாயம் அவர்களை அன்போடு அழைத்து ஆதரவு செலுத்தி வருகின்றது. சமத்துவத்தை எதிர்பார்த்து வந்த மக்கள் அதனை நன்றாக அனுபவிக் கின்றார்கள். அவர்களில் பலர் முஸ்லிம் முஹல்லாக்களின் தலைவர்களாகவும் செயலாளர்களாகவும் பொறுப்பேற்று முஸ்லிம் முஹல்லாக்களை வழிநடத்தி வருகின்றார்கள்.

இவர்களின் இளவல்கள் பலர், ஆலிம் பட்டம் பெற்று தமிழகமெங்கும் உள்ள முஹல்லாக்களில் இமாம்களாக பொறுப் பேற்று ஐங்கால தொழுகைகளை தலைமை யேற்று நடத்தி வருகின்றார்கள்.

இன்னும் பலர் தங்கள் மக்களை இருட்டி லிருந்து வெளிச்சத்திற்கு கொண்டு வந்திட அதாவது இஸ்லாத்திற்கு உழைத்துக் கொண்டி ருக்கிறார்கள். இதனுடன் அமுக்கப்பட்ட மக்களின் பிரச்னைகளை தீர்த்திடவும் உழைத்துக் கொண்டிருக் கிறார்கள்.

பெரும்பாலும் வாழ்வில் தொழுகையை நிலைநாட்டி வருகின்றார்கள். ஸக்காத்தை பெற்று வந்த மக்கள் இப்போது ஸக்காத்தை கொடுத்து வருகின்றார்கள். குர்பானும் தவறாமல் கொடுக்கின்றார்கள். நல்ல முஸ்லிம்களாக வாழ்கின்றார்கள்.

இதற்காக நாம் கடந்த 39 ஆண்டுகளாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நிலையான, நிறைவான வாழ்க்கை வழி காட்டலை தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்.

இந்த வெற்றி சில நல்லுள்ளங்கொண்ட முஸ்லிம் தனவந்தர்களுக்கும் சொந்தம். அவர்கள் இன்னும் உதவிகளை செய்து கொண்டி ருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நற்கூலிகளை நல்கிடுவானாக!

இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களை அவர்களுடைய பழைய இருப்பிடங்களி லேயே விட்டுவிடாமல் முஸ்லிம்களின் முஹல் லாக்களில் குடியமர்த்தும் பணி களையும் செய்து வருகின்றோம்.

# பிற மாநிலங்களில் தாஃவா

## 1990 முதல் தொடரும் பணி..!

### கர்நாடகம், டெல்லி, உத்திரபிரதேசம், பீகார், கேரளம்

39 ஆண்டு காலமாக தொடர்ந்து வரும் இந்த தாஃவா நெடும் பயணத்தில் நாம் *1990* ஆம் ஆண்டு முதலே அண்டை மாநிலங்களில் மெல்ல, மெல்ல ஆனால் உறுதியாக கால்பதித்தோம்.

*1990*ஆம் ஆண்டு கொடிக்கால் ஷேக் அப்துல்லாவின் "புறப்படு நீயும் இஸ்லாத்தை நோக்கி" என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்டோம்.

இந்த வெளியீடு அப்போது நாம் மயிலாடுதுறையில் நிறுவி நடத்திவந்த "இலக்கிய பணிமனை" என்ற வெளியீட்டகத்தில் வெளிவந்தது. அதன் ஆங்கில ஆக்கத்திற்கு Let us March Towards Islam என்று பெயர். அதனை தொடர்ந்து நாம் மேற்கொண்ட முயற்சிகளின் வழி *1995*ம் ஆண்டு அலிகர் பல்கலைக் கழகத்தின் ஹிந்தி துறையில் ஹிந்தியில் இந்நூல் வெளியிடப் பட்டது. அன்றே தாஃவா நமது தலைநகர் டெல்லியில் தொடங்கி, ஹிந்தி கூறும் உலகெங்கும் பரவியது.


*2002*ம் ஆண்டில் இந்த நூலைக் கன்னட மொழியில் மொழி பெயர்த்து நமது வேர்கள் வெளியீட்டகத்தில் வெளியிட்டோம். எடுத்த எடுப்பிலேயே சுமார் *10* ஆயிரம் பிரதிகளை இலவசமாக விநியோகித்தோம்.

அதன்பின் அங்கு தாஃவா களத்தில் வேலை செய்யும் பல்வேறு அமைப்புகளோடும் நமது தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் இணைந்து பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தோம். அவர்கள் ஏற்பாடு செய்த தாஃவா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு உரை யாற்றினோம். இந்த முயற்சிகள் வழி பலர் இஸ்லாத்தை ஏற்றார்கள். பல்வேறு நிறுவனங்களில் இணைந்து கல்வியும் கற்றார்கள்.


தொடர்ந்து டி.எம்.உமர் பாரூக் அவர்களின் "ஜாதி ஒழிந்தது" என்ற நூலை நவம்பர் *2013* ஆம் ஆண்டு கன்னட மொழியில் வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பில் மொழி பெயர்த்து வெளியிட்டோம். அதிலும் சுமார் *5000* பிரதிகள் வரை இலவசமாக விநியோகித்தோம்.

ஹிந்தி மொழி பெயர்ப்பு நூலின் வெளியீட்டு நிகழ்ச்சி








உத்திரப் பிரதேசத்தின் தலைநகர் லக்னோவில் தொடங்கி இந்த இலவச வினியோகம் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது அல்ஹம்துலில்லாஹ்

கன்னட மாநிலத்தை பொறுத்தவரை தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் நிரம்பவே வாழுகின்றார்கள்.

ஆகவே நமது தாஃவா இலக்கியங்கள் தமிழில் வருபவை எல்லாம் பெங்களூரிலும் வெளியிடப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து தமிழ் கூறும் நமது சகோதர சமுதாயத்தவர் களுக்கு இலவசமாகவும் விநியோகிக்கப்படு கின்றன.

*2010*ஆம் ஆண்டில் ஜாதி ஒழிந்து என்ற டி.எம். உமர் பாரூக் அவர்களின் நூலை ஆங்கி லத்தில் மொழி பெயர்த்து வேர்கள் வெளியீட்ட கத்தின் வழி வெளியிட்டோம். இந்த வெளியீடு டெல்லியில் நடந்தது.

ஆங்கிலத்தில் நூலின் பெயர்
End of Casteism.

ஆங்கில நூல் வடமாநிலத்து வாசகர் களிடையே ஏற்படுத்திய தாக்கம் அலாதி யானது. இவர்கள் தந்த அழுத்தத்தால் தான் இதன் ஹிந்தி வெளியீடு தயாரானது. டெல்லியில் நடந்த நமது நூல் வெளியீட்டு விழா நிகழ்ச்சியை ஈடிவி என்ற தொலைக் காட்சி உலகமெல்லாம் பரப்பியது குறிப்பிடத் தக்கது. இதன் அடிப்படையில் பல வெளி நாட்டு அழைப்புகள் உமர் பாரூக் அவர்களுக்கு வந்தது குறிப்பிடத்தக்கது. இப்போது ஆங்கில நூலும் ஹிந்தி நூலும் ஒன்றுபோல் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

பீகார் மாநிலத்தின் தலைநகர் பாட்னாவில் வருடம்தோறும் ஒரு புத்தகக் கண்காட்சி மாநில அளவில் நடைபெறுகின்றது. இந்த புத்தகக் கண்காட்சியில் "ஜாதி ஒழிந்தது" நூல் இந்தி மொழியிலும் ஆங்கில மொழியிலும் இலவச மாக விநியோகிக்கப்படுகின்றன. அங்குள்ள நல்ல உள்ளம் கொண்டவர்கள் இதனை செய்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ்.

# இஸ்லாத்தை ஏற்ற 35 ஆண்டுகளாக அந்தக் கேள்வி இல்லை..!

## - கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்

அடிக்கடி தொலைபேசி வழியாக என்னைத் தொடர்பு கொள்வார்கள்... இப்போ தெல்லாம் நாங்கள் பேசுவது பல மணித்துணிகள் தொடருகின்றன. *10-02.2020* அன்றும், அதே போல் தொடர்ந்தது. அதில், அண்ணன் கொடிக்கால் ஷேக் அவர்கள், அண்மையில் குமரி மாவட்டத்தில் நடந்த பல்வேறு நிகழ்வுகளைப் பற்றிய ஓர் அறிமுகத்தைத் தந்தார்கள். அதில், ஓர் நிகழ்வில் தான் ஒருமணி நேரத்திற்குமேல் ஆற்றிய உரையைக் குறிப்பிட் டார்கள். அந்த உரை தான் குறிப்பேதுமின்றி, சங்கிலித் தொடராய் தகவல்களைத் கொடுத்தது, அனைவரையும் கவர்ந்தது எனக் குறிப்பிட்டார்கள்.

இறுதியில், தன்னிடம் ஒரு கேள்வியை கூட்டத் தில் கலந்துகொண்டவர்கள் கேட்டார்கள் என்றார். அந்தக் கேள்வி "நீங்கள் ஏன் மதம் மாறினீர்கள்?" அதற்கு கொடிக்கால் அவர்கள் தந்த பதில்,

"நான் இந்தக் குமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டுள்ளேன். பல வெற்றிகளை ஈட்டி இருக்கின்றேன். நான் பெற்ற பாராட்டுகள் ஏராளம். ஆனால் அந்த நிகழ்ச்சி களின் இறுதியில் ஒரு கேள்வியைக் கேட்பார்கள். அது நீங்கள் என்ன ஜாதியைச் சேர்ந்தவர்கள் என்பதே.!

இந்தக் கேள்வியை நேரடியாகக் கேட்டவர்கள் சிலர், பலர் இந்தக் கேள்வியை சுற்றி வளைத்துக் கேட்டார்கள். என்னுள் ஓர் ஆதங்கம், என்னதான் நாம் உழைத்து ஊரைக் கூட்டி வெற்றிகளை ஈட்டி னாலும், இவர்கள் நம் பூர்வீகத்தைதத் தெரிந்து கொள்ளத்தானே முயற்சி செய்கின்றார்கள். ஆனால் நான் இஸ்லாத்தை ஏற்றுக்கொண்ட பிறகு கடந்த *35* ஆண்டுகளாக இதுபோன்ற கேள்விகள் இல்லை. யாரும் இப்போது என்னுடைய ஜாதியை தெரிந்து கொள்ள முயற்சி செய்வதும் இல்லை. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால் கிடைத்த நேரடி பலாபலன். ●

# நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்

பாசிசத்தை மாய்ப்போம்..
பாரதத்தை மீட்போம்..

சமூக அநீதிகளை அழிப்போம்..
சாதியை ஒழிப்போம்..

சமத்துவத்தையும், சகோதரத்து வத்தையும்
நிலைநாட்டுவோம்...

மனிதர்கள் அனைவரும் ஓரே
ஊற்றிலிருந்து பிறந்த வர்களே!


இந்த லட்சியங்களை முன்வைத்து "வைகறை வெளிச்சம்" வாசகர் வட்டங்களில் உருவாக்கப் பட்டதே "நீதி அமைதிக்கான மக்கள் இயக்கம்" அன்று ஆங்கில ஏகாதி பத்தியத்திற்கெதிராக அடக்குமுறைகளுக்கெதிராக ஆண்டாண்டு காலமாக தங்கள் உடல், பொருள், ஆவி அனைத் தையும் தந்து போராடினார்கள் முஸ்லிம்கள். இந்த பெரும்போரில் சகோதர சமுதாயத்தைச் சார்ந்த அனைவரும் ஓரணியில் ஒன்று திரண்டார்கள், வென்றார்கள்.

ஆக விடுதலை அடைந்த எழுபது ஆண்டு களுக்குள் பாசிச பயங்கரவாதம் சுதந்திர இந்தியாவை காவு கொண்டு விட்டன. இதில் மிகப்பெரிய கேடும், கேவலமும் என்னவெனில் பழைய சாதிய அடுக்குச் சனாதானமும் அதனைத் தொடர்ந்த அடக்குமுறைகளும், ஒடுக்கு முறைகளும், பட்டப்பகல் படுகொலை களும், கற்பழிப்புகளும், குழந்தை கொலைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. ஒரு முழுமை யான மாற்றத்திற்கு இந்தியப் பெரு நிலத்தை உட்படுத்தியாக வேண்டும். அதே நேரத்தில் எல்லாப் பிரச்சனைகளையும் ஒன்றாய்த் தீர்த்து நீதியை நிலை நாட்டி அமைதியையும், நிம்மதி யையும் மக்களுக்குத் தந்தாக வேண்டும்.

இந்த இலக்குகளை அடைந்திட நாம் மேற்கொண்டு வரும் முயற்சிகளின் வடிவமே இந்த கருத்தரங்குகள். இதில் எல்லாக் கொள்கை களைச் சார்ந்தவர்களும் பங்கெடுக்கின்றனர்.

இஸ்லாத்தின் ஆட்சி முறை மட்டுமே மக்களைக் காப்பாற்றிட வல்லது என்பது விளக்கிச் சொல்லப்படுகிறது. விவாதங்களில் பங்கேற்பவர்களும் கலந்து கொள்பவர்களும் அதனை ஏற்றுக் கொள்கின்றனர். அல்ஹம்து லில்லாஹ்.

# இந்திய பாசிசத்தின் உண்மை முகம்




## கண்டுபிடித்தோம் தமிழ்கூறும் உலகுக்கு அறிவித்தோம்!

கடந்த சுமார் 20 ஆண்டுகளாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குண்டுகள் வெடித்தன. பல அப்பாவி மக்கள் கொல்லப் பட்டார்கள். அத்தனையும் முஸ்லிம் தீவிரவாதி களின் செயல் என இடைவிடாமல் ஊடகங் களால் பிரச்சாரம் செய்யப்பட்டன.

நாடெங்கும் முஸ்லிம் இளைஞர்கள் சந்தேகக்கண்கொண்டு பார்க்கப்பட்டனர். மொத்த முஸ்லிம் சமுதாயமும் குற்றப்பட்டு நின்றது.

ஆனால் நாம் தொடர்ந்து நமது எழுத் துக்கள் வழியாகவும், மேடைகள் வழியாகவும், விவாதங்கள் வழியாகவும் இதுபோன்ற தீவிரவாத செயல்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சம்மந்தமில்லை என்பதைத் தெளிவுபடுத்தி வந்தோம். நமது பிரச்சார நெடும் பயணத்தின் போதுதான் அந்த நிகழ்வு நடந்தது.

அதுதான் 26/11 என அடையாளப்படுத்தப் படும் மும்பை தாக்குதல். இந்தத் தாக்குதல் களினூடே ஹேமந்த் கர்கரே என்பவர் கொலை செய்யப்பட்டார். இவர் மராட்டிய மாநில தீவிர வாத தடுப்புப் படையின் தலைவர். இவர்தான் நமது நாட்டில் நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தையும் நடத்தியவர்கள் சங்கப் பரிவா ரத்தைச் சார்ந்தவர்கள் என்ற உண்மையைக் கண்டுபிடித்தவர். உலகுக்கு அறிவித்தவர். சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்கள் மீது குற்றப் பத்திரி கையை தாக்கல் செய்தவர். அத்தோடு சங்கப் பரிவாரத்தைச் சார்ந்தவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்தவர். இவர் மிகவும் "மர்ம மான" முறையில் கொலை செய்யப்பட்டார்.

இவருடைய கொலையை ஆய்வுக்கு உட்படுத்தினார் எஸ்.எம் முஷ்ரிஃப் என்ற அதே மராட்டிய காவல்துறையைச் சார்ந்த ஐ.ஜி. (Inspector General of Police S.M. Mushrif)

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்கள் உச்ச நீதிமன் றத்தை அணுகினார்கள். உச்ச நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்த ரிட் மனுவில் மராட்டிய காவல்துறையின் மிகவும் நேர்மையான அதிகாரி ஹேமந்த் கர்கரே, தீவிரவாதிகளால் கொலை செய்யப்படவில்லை. அவரை கொலை செய்தது மத்திய உளவுத்துறையின் ஏற்பாட்டின் கீழ், அபிநவ்பாரத் என்ற இந்துத்துவ தீவிரவாத அமைப்புதான்.










ஆகவே கர்கரே கொலை செய்யப்பட்ட பகுதியை மறு ஆய்வுக்கு உட்படுத்திட வேண்டும் எனக் கோரினார்.

பின்னர் அதையே நூலாகவும் வெளியிட்டார். இந்த நூலை தமிழில் மொழியாக்கம் செய்தோம். 24 வெளியீட்டு நிகழ்ச்சிகளை நடத்தினோம்.

இந்திய தீவிரவாதத்தின் உண்மை முகம் சங்கப் பரிவாரம் தான் என்பதை தமிழ் நல்லுலகிற்கு எடுத்துச் சொன்னோம். அதாவது இன்று நாட்டை ஆளுபவர்கள் என்பதைத் தெளிவுபடுத்தினோம்.

நூலின் தாக்கம் ஊடகங்களிலும் பெரிதாக எடுப்பட்டது. பல விவாதங்களில் பாசிஸ்ட்டுகள் திக்கு முக்காடினார்கள்.

**நீதித்துறையின் மயக்கம்**

பின்னர் நீதித்துறை அஜ்மல் கசாப் என்ற அப்பாவியைத் தூக்கிலிட்டு மொத்த வழக்கையும் மூடியபோது, அதே முஷ்ரிஃப் அவர்கள் இன்னொரு நூலை வெளியிட்டார்கள். 26/11 Why Judiciary also failed அதை 26/11 நீதித்துறையும் மயங்கியது ஏன்? என மொழிபெயர்த்து வெளியிட்டோம். அதிலும் 5 வெளியீட்டு நிகழ்ச்சியை நடத்தி நீதித்துறையின் தகிடுத்தத்தங்களை மக்கள் மன்றத்தில் வெளிக்கொண்டு வந்தோம்.

இப்படி இந்தியத் தீவிரவாதத்தின் உண்மை முகத்தை தோலுரித்துக் காட்டுவதில் மகத்தான வெற்றிகளைக் கண்டோம்.






இந்தியாவில் குண்டுகளை வைத்து அப்பாவி மக்களை பிணங்களாக குவித்துக் கொண்டிருந்தவர்கள் இந்துத்துவவாதிகள்தான். இதனை முறையாகக் கண்டுபிடித்தவர் மராட்டிய காவல்துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே. அன்றிலிருந்து இந்தியாவில் தீவிரவாதப் பார்வை முற்றாக மாறிப்போனது. இந்த பெரும் செய்தியை வரும் தலைமுறை தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக நிறுவப்பட்டதே கர்கரே விருது. இதுவரை இரண்டு விருதுகளை வழங்கி இருக்கின்றோம்.

# மக்கள் சேவை





இஸ்லாத்தின் பக்கம் மக்களை அழைப்பதே எங்களது முக்கியப் பணி. எனினும் துயறுரும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதும் நமது பணிகளுள் ஒன்று. அந்த வகையில் இலவச மருத்துவ முகாம்களை வாய்ப்புகள் கிடைக்கும் போதெல்லாம் நடத்துகின்றோம். (நாள் 22-6-2019)

# NPR - NRC - CAA
# குடியுரிமைத் திருத்தச் சட்டமும் அதற்கு எதிரான போரில் நாமும்


மூத்த வழக்கறிஞர்
ஹாபிஸ் ரஷீது அஹமது சௌத்ரி

மத ரீதியாக இந்திய மக்களை பிளவுப் படுத்தி தங்கள் 200 ஆண்டுகால பாசிச கொள்கையை அமல்படுத்த பார்ப்பணியர்கள் இந்திய இறையாண்மைக் கெதிராக குடியுரிமை திருத்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றியுள்ளனர்.

இதை நாட்டு மக்கள் பலர் கருப்புச் சட்டம் என்று விமர்ச்சித்தாலும், அதை பார்ப்பணிய பாசிச சட்டம் என்று அழைப்பதே மிகச் சரியானதாக இருக்கும். இப்படி ஏன், கூறுகின்றோம் என்றால் தலித் வாய்ஸ் பத்திரிகையின் ஆசிரியர் வி.டி.இராஜசேகர் அவர்கள் முஸ்லிம்களை பூண்டோட ஒழிக்கத் திட்டம் என்னும் புத்தகத்தில் கூறுகையில்

"ஸ்பெயினை கிறிஸ்தவர்கள் 120 ஆண்டுகள் திட்டமிட்டு 780 ஆண்டுகாலம் ஆட்சி செய்த இஸ்லாமிய ஆட்சியை வீழ்த்தியதைப் போல் இந்தியாவிற்கு வந்த பார்ப்பணர்கள் அதை ஆய்வு செய்து இங்கே பாசிசத்தை நிலைநாட்ட துடிக்கின்றனர்" என்கின்றார்.

ஆயிரம் தலைவெட்டி அமிட்ஷா இங்கு அமல்படுத்திய பாசிச குடியுரிமை திருத்தச் சட்டத்திற்கு எதிராக இந்தியா முழுவதும் தன்னெழுச்சியான எதிர்ப்புகள் எழுந்தன. அந்த வரிசையில் குமரி மாவட்டத்திலும் சுமார் 43 கூட்டங்கள் அனைத்து தரப்பு மக்களாலும் ஜாதி, மத, பேதமின்றி நடைபெற்றது. இதில் மூத்த வழக்கறிஞர்கள், நாடார் சமூக தலைவர்கள், கிறிஸ்துவ பங்குத்தந்தைகள், திராவிட மற்றும் கட்சித் தலைவர்களும் திரளாக கலந்துகொண்டு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

## NRC - CAA வால் ஹிந்துக்களுக்கு ஆபத்து

- மூத்த வழக்கறிஞர் லஜபதிராய்



மதுரை உயர்நீதி மன்றத்தில் மூத்த வழக் கறிஞராக இருந்து வருபவர் லஜபதிராய் அவர்கள் கன்னியா குமரியில் நடைபெற்ற ஓர் கண்டன ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டார். அப்போது அவர் கூறியதாவது

NPR கணக்கெடுப்பின்போது NPR-யின் கேள்வியில் பாரதப் பிரதமர் மோடி அவர்கள் தங்கள் மனைவியின் பெயர் கேட்கப்படும் அந்த படிவத்தில் பதில் சொல்ல முடியாமல் திருதிருவென்றுதான் முழித்துக்கொள்ள நேரிடும் பதில் சொல்ல இயலாது என்று கூறினார்.

மேலும் வழக்கறிஞர் லஜபதிராய் அவர்கள் ஆற்றிய உரை அங்கு ஓர் தாஃவா உணர்வை ஏற்படுத்தியது.



# முத்துப்பேட்டையில் NRC, NPR, அஸ்ஸாமில் நடந்தது என்ன விழிப்புணர்வு கூட்டம்





*குமரி மாவட்டத்தில் திருவாங்கூர் சமஸ் தானமாக இருந்த காலக்கட்டத்தில் ஹிந்து சமுதாயத்தை சார்ந்த நாடார்கள் எத்துணை தீண்டாமைக்கு ஆளாக்கப்பட்டார்கள்,*

**கோவிலுக்குள் நுழைய விடுவதில்லை, சுசீந்திரம், தேனி மாவட்டம் போன்ற பகுதிகளிலும் தீண்டாமையினால் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாக்கப்பட்டார்கள். பொறுக்க வியலாத நாடார்கள் பலர் பிற மதங்களுக்கு மாறினார்கள் விடுதலை யடைந்தார்கள். ஹிந்து என்ற பெயரால் நடக்கும் அந்த ஜாதி அடக்குமுறைகளையும் அவர்கள் பெற்ற விடுதலையும் எடுத்துரைத் தவண்ணம் ஓர் தாஃவா களத்தை உணர்த்தியது.**

மேலும் NPR, NRC-ல் ஹிந்துக்களுக்கு பெரிய பாதுகாப்பு இருப்பதுபோல் ஓர் மாயையை உருவாக்குகிறார்கள், இந்தியாவில் இந்த NRC, CAA அமல்படுத்தப்பட்டு நடை முறைக்கு வந்தால் இங்கு அதிகம் பாதிக்கப் படுவது முதலில் ஹிந்துக்களாகத்தான் இருப்பார்கள் என்பதில் என்ற மாற்றுக் கருத்தும் இல்லை, (அங்கு அசாமிலும் அதிகம் பாதிப்புக்குள்ளானது ஹிந்துதான் அது, ஓர் உதாரணம்) என்று கூறி தனது உரையை முடித்தார்.



**பரங்கிப்பேட்டையில் NRC, NPR, CAA சட்ட விளக்க கூட்டம்**
14-3-2020



அத்திகடை, பெரிய பள்ளிவாசல் மண்டபத்தில்
**NRC, NPR, CAA விளக்க கூட்டம்**

நாகர்கோயிலில் NRC, NPR, CAA பற்றிய விழிப்புணர்வு கூட்டம்
10-3-2020





14-3-2020 அன்று தலைமைச் செயலகத்தில்
தலைமைச் செயலாளர் முன்னிலையில் நடந்த விவாவத்தின்போது








**06.07.2019**
**மேட்டுப்பாளையம்**

# பிராமணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லிம்கள் தூக்கில் தொங்கினார்கள்

எஸ்.எம்.முஷ்ரிஃப் அவர்களின் தற்போதைய நூல் இது. இந்த நூலில் சங்கபரிவாரத்தின் குண்டு வெடிப்புகள், எப்படியெல்லாம் உளவுத்துறையாலும் காவல் துறையாலும், சிலபல நேரங்களில் நீதிமன்றங்களாலும் மறைக்கப்படுகின்றன என்பதை விரித்துரைக்கும் நூல்.

இந்தியாவில் நடந்த குண்டு வெடிப்புகள் அனைத்தும் ஆர்.எஸ்.எஸ்., அபிநவ்பாரத், பஜ்ரங்தளம், சனாதன் சாஸ்த்தா, ஜெய்வந்தே மாதிரம், ஆகிய பிராமணிஸ்ட்டு அமைப்புகளால் நடத்தப்பட்டவையே என்பதை நிறுவுகின்றார் எஸ்.எம்.முஷ்ரிஃப். இதற்காக அவர் இந்தியாவில் நடந்த குண்டு வெடிப்புகள் பற்றிய கள ஆய்வு, தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகைகள் வழங்கப்பட்ட தீர்ப்புகள், இவற்றையெல்லாம், ஆய்வுக்கு உட்படுத்துகின்றார். ஒரு பல்கலைக் கழகம் கொட்டிட வேண்டிய உழைப்பை கொட்டி இருக்கின்றார்.

குண்டு வெடிப்புகளை நடத்திய பிராமிணிஸ்ட்டுகள் எப்படி உளவுத்துறை, காவல் துறை இவற்றின் உதவியோடு தப்பித்து விடுகின்றார்கள், பழியை எவ்வளவு லாவகமாக முஸ்லிம்கள் மீது போட்டு விடுகின்றார்கள். இந்த அநீதிக்கு நமது ஊடகங்கள் எப்படித் துணை நிற்கின்றன என்பனவற்றையெல்லாம், துல்லியமான ஆதாரங்களோடு நிறுவுகின்றார்.

இந்த நூலை நாம் விலை தந்து வாங்கி, பிரபல்யங்கள், சகோதர சமுதாயத்தைச் சார்ந்த சிந்தனையாளர்கள் ஊடகவியலாளர்கள், இவர்களுக்கெல்லாம் விநியோகித்து வருகின்றோம். அதனை தமிழ் கூறும் நல்லுகத்திற்கும் தமிழில் தரவிருக்கின்றோம். இன்ஷா அல்லாஹ்.

ஆங்கில நூலின் அறிமுகத்தை ஆங்காங்கே நடத்தி வருகின்றோம்.

### பாசிஸ்ட்டுகளின் சதியை தோலுரித்துக்காட்டும் நமது நிகழ்ச்சிகள்...

- **கர்கரேயைக் கொலை செய்தது யார்..?** 28 **வெளியீட்டு நிகழ்ச்சிகள்....**
- 26/11 **விசாரணை - நீதித்துறையும் மயங்கியது ஏன்?** 18 **நிகழ்ச்சிகள்...**
- **பிராமிணிஸ்ட்டுகள் குண்டு வைத்தார்கள்.... முஸ்லிம்கள் தூக்கில் தொங்கினார்கள்..**
- **ஆங்கில நூல் இதுவரை** 3 **நிகழ்வுகள்...**
- **இந்த முயற்சியில் பல்வேறு வழக்குகளைச் சந்தித்து வென்றிருக்கின்றோம்.**

**- இவற்றையெல்லாம் மிகப்பெரியதொரு தொகையை செலவிட்டிருக்கின்றோம்.**

# சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாத செயல்..?

# காந்தி கொலை ஏன் எப்படி..?




ஒரு தீவிரவாத செயல், வரலாறு முழுவதும் மறைக்கப்பட்டே வருகின்றது. அதுதான், சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம்.

இந்தத் தீவிரவாதத்தை செய்தவர் ஓர் இந்துத்துவ தீவிரவாதி அவருடைய பெயர் நாதுராம் கோட்சே, இவருடைய தீவிரவாத செயலுக்க பலியானவர், தேசத் தந்தை எனப் பாராட்டப்படும் மகாத்மா காந்தி அவர்கள்தாம்.

இந்தத் தலைப்பில் நாம் காந்திக் கொலை ஏன் எப்படி என்று ஒரு நூலை வெளியிட்டோம். அதில் காந்தி எப்படி கொலை செய்யப்பட்டார் என்பதை விரிவாக விளக்கி இருந்தோம்.

இந்த நூலின் தாக்கத்தை நாம், எல்லா நிலைகளிலம் கண்டோம்.

காந்திஜி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30 ஆம் நாள் மேடை பேச்சாளர்களுக்கு இந்த நூலே வழிகாட்டி.

அண்மையில் மக்கள் நீதி மையம் என்ற கட்சியின் தலைவர், பிரபல நடிகர் கமல ஹாசன் அவர்கள் இதை உரக்க முழங்கினார். இந்தச் செய்தி மக்களிடம் வெகுவாகவே சென்று சேர்ந்தது.

**Free India's First Terrorist Was Hindu, His Name Is Nathuram Godse: Kamal Haasan**

**Earlier, Kamal Haasan had stoked a row, when in November 2017, he took potshots at what he termed as 'Hindu extremism,' which drew condemnation from the BJP and Hindu outfits.**

OUTLOOK WEB BUREAU 13 MAY 2019

Makkal Needhi Maiyam founder Kamal Haasan said independent India's first terrorist was a "Hindu", referring to Nathuram Godse who killed Mahatma Gandhi
PTI File Photo

INCREASE TEXT SIZE

Veteran actor and Makkal Needhi Maiyam (MNM) founder Kamal Haasan has stoked a possible controversy, saying free India's first "terrorist was a Hindu," referring to Nathuram Godse who killed Mahatma Gandhi



22.02.2020 அன்று சென்னை ஈத்கா பள்ளிவாசலில் NRC பற்றிய விழிப்புணர்வு கூட்டம்

# முஸ்லிம்களை நாடற்றவர்களாக ஆக்கிடும் சதிக்கு எதிரான போர்

"முஸ்லிம்கள் இல்லாத, இந்தியாவை உருவாக்குவோம்" என்பதே இன்றைய பாசிச பரிவாரங்களின் இலட்சியம். இதற்காகத்தான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கும். இஸ்லாமோ ஃபோபியாவை (Islamo phobia) வளர்த்து வருகின்றார்கள். முஸ்லிம்களை மிகப்பெரிய எதிரி களாக காட்டி வருகின்றார்கள்.

இதற்காகத்தான் திட்டமிட்டு, பல வகுப்புக் கலவரங்களை நடத்தினார்கள். கடந்த 200 ஆண்டுகளாக பலகோடி முஸ்லிம்களைக் கொலை செய்தார்கள்.

சுதந்திர இந்தியாவில், இந்தக் கொலைகள், அரசின் அங்கீகாரத்தோடு நடந்தன. 1998-க்குப் பின் அரசின் காவல் இயந்திரங்களே இந்தக் கொலையைச் செய்தன.





காவல்துறை இந்துத்துவ கொலைகாரர்களோடு இணைந்து இந்தக் கொலைகளைச் செய்தார்கள். பல நேரங்களில் இணை இராணுவமும், இராணுவமும் முஸ்லிம்களைக் கொலை செய்தன. நீதிமன்றங்கள் துணை நின்றன.

கஷ்மீரில் கொலைகளையும், கற்பழிப்புகளையும் நமது இராணுவத்தினரே செய்தார்கள். இவற்றை செய்யும் இராணுவத்தினரைக் காப்பாற்றிட (AFSA) அப்சா என்றொரு சட்டம் இருக்கின்றது. பின்னர் இவையெல்லாம் போதாதென்று முஸ்லிம்கள் அதிகமாக வாழும் கஷ்மீரையும், அசாம் மாநிலத்தையும் குறிவைத்து அழித்தார்கள்.

கஷ்மீரில், அரசியல் நிர்ணயச் சட்டம், பிரிவு 370-ஐ நீக்குகின்றோம் என்ற பெயரில் அனைத்தையும் செய்தார்கள். முஸ்லிம்களை ஒன்றுமில்லாமலாக்கினார்கள்.

அசாமில் NRC தேசிய குடியுரிமைப் பதிவேடு என்ற பெயரில் அனைத்தையும் செய்தார்கள்.

அடுத்து இந்தியாவின் இதரப் பகுதிகளில் வாழும் முஸ்லிம்களைக் குறிவைத்தார்கள். அதற்காக NRC, CAA என்ற தேசிய குடியுரிமைப் பதிவேடு, குடியுரிமைத் திருத்தச் சட்டம்-2019 என்பனவற்றைக் கையிலே எடுத்தார்கள்.

இதைத் தேசிய குடியுரிமை திருத்தச் சட்டம் முஸ்லிம்களை நாடற்றவர்களாக ஆக்கிவிடும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆண்டோனியோ பவுட்ரஸ் தெரிவித்தார். இதிலுள்ள ஆபத்துக்களை உணர்ந்த மக்கள் எதிர்த்தார்கள். நாம், சட்டப்பூர்வமாகவும் புத்திசாலித்தன மாகவும் இந்த NRC, CAA என்ற சதிகளை வென்றிட வழிகளை ஆய்வு செய்தோம். அந்த வழியில் மக்களை, முஸ்லிம்களைத் தயார் செய்தோம்.

தமிழகமெங்கும் பயிற்சி வகுப்புகளை நடத்தினோம். அவற்றின் காட்சிகளை இணைத்துள்ளோம்.

இந்த முயற்சியின் முத்தாய்ப்பாக அசாமில் அமித்ஷா-மோடி ஆகியோரின் NRC, CAA-ஐ தோல்வியடையச் செய்தவர்களுள் ஒருவரான ஹாபிஸ் ராஷித் சௌத்ரி அவர்களை அழைத்து வந்து பல நிகழ்ச்சிகளைத் தமிழகத்தில் நடத்தினோம். மக்கள் பெரிய அளவில் விழிப்புணர்வை பெற்றார்கள்.



## தப்லீக் ஜமாஅத் மீது அவதூறு

# நமது சட்டக் குழுமம் தொடுத்தப் போர்..!

நாடெங்கும் முஸ்லிம்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகள் சட்ட அமைப்புகளைக் கொண்டே நிறைவேற்றப்படுகின்றன. இன்று இந்திய சிறைச்சாலைகளில் அதிக அளவில் விசாரணைக் கைதிகளாகவே இருப்பவர்கள் முஸ்லிம்கள். இதற்கான காரணம் சட்டம் குறித்த அறியாமை. முறையாக சட்ட முறைமைகளை பயன்படுத்தாமை. சட்ட அமைப்புகளை நாடுவதில் உள்ள நடைமுறை சிக்கல் குறித்த பயம். இதன் காரணமாகவே முஸ்லிம்களின் மீது எளிதாக குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு அவர்கள் சிறைச்சாலைகளில் உள்ளனர்.

ஆனால் வெளிப்படையாக குற்றசெயல்களில் ஈடுபட்டவர்கள், நாட்டின் ஒற்றுமைக்கு எதிராக விஷத்தை கக்குபவர்கள் மிகச் சுதந்திரமாக நாட்டில் உலா வந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலை மாறவேண்டும் என்பதே அனைவரின் அவா.

பூனைக்கு யார் மணி கட்டுவது. இதற்கான முயற்சி ஒன்றை தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் தமிழகத்தில் முன்னெடுத்தது. இதற்காக தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கும் தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட்-இன் சட்டக்குழுவினர் பயணம் செய்து ஆங்காங்கே படித்த மக்களை ஒருங்கிணைத்து அவர்களை சட்டரீதியான போராட்டத்திற்கு தயார் செய்தது.

இந்த முயற்சிகளுக்கு அல்லாஹ் நிறைவாக வெற்றியை தந்தான். நாடெங்கும் கொரோனா வைரஸ் காரணமாக ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு அனைவரும் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்த நிலையிலும் சங்க பரிவாரத்தின் ஊதுகுழலாக இருந்த சில ஊடகங்கள் இஸ்லாமிய சமூகத்தினர் மீது அவதூறு பிரச்சாரத்தை முன்னெடுத்தன இஸ்லாமியர்கள் மீது வெறுப்பை கக்கின. அதில் முன்னணியில் நின்றது தினமலர் என்ற நாளிதழ்.

இதன் திருச்சி இதழில் டீக்கடை பெஞ்ச் என்ற பகுதியில் முஸ்லிம்கள் கொரோனா ஜிஹாத் செய்வதாகவும் நாடெங்கும் தப்லீக் ஜமாத்தினர் நோய் பரப்பி வருவதாகவும் அவதூறை செய்தியாக வெளியிட்டது. இதுவரை தாங்கள் செய்துவந்த வெறுப்பு பிரச்சாரத்திற்கு எந்தவித தடைகளும் இல்லாத காரணத்தினால் தங்குதடையின்றி இதுபோன்ற விஷப்பிரச்சாரத்தை செய்து வந்த தினமலர் பத்திரிகையை இந்த முறை அப்படி எளிதாக வெறுப்பு பிரச்சாரத்தை செய்ய தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் அனுமதிக்கவில்லை.

உடனடியாக அது உருவாக்கி வைத்திருந்த சட்ட குழுமங்கள் வழியாக தமிழகமெங்கும் தினமலர் பத்திரிக்கைக்கு எதிராக ஆன்லைனில் காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்டது. அதன் விளைவு அடுத்த இரண்டு நாட்களில் தினமலர் மறுப்பு செய்தியை மன்னிப்பு கோரும் விதத்தில் வெளியிட்டது. ஆனால் நாம் அதை அவ்வளவு சுலபமாக விடுவதாக இல்லை அந்த செய்தியில் தங்களுக்கு ஜிஹாத் குறித்த செய்தியை உளவுத்துறை தான் தந்தது என்றொரு குறிப்பை. தந்திருந்தது.

எனவே நமது சட்ட குழுமத்தினர் உடனடியாக உளவுத் துறைக்கு எதிராக முதலமைச்சர் தனிப்பிரிவில் புகார் செய்தனர். அதுமட்டுமன்றி நாடெங்கிலும் சமூக ஊடகங்களில் முஸ்லிம்களுக்கு எதிராக பல இந்துத்துவாவினர் தங்களது சேட்டைகளை விஷம வெறுப்பு பிரச்சாரங்களின் வழியாக மேற்கொண்டிருந்தனர். இதற்கும் முற்றுப்புள்ளி வைக்க தாருல் இஸ்லாம் பவுண்டேஷன் டிரஸ்ட் முடிவு செய்தது.

எனவே நமது சட்டக் குழுமத்தினரின்

உதவியை நாடினோம். உடன் நாடெங்கும் சங்க பரிவாரத்தின் அங்கத்தினருக்கு எதிராக ஆன்லைனில் காவல்துறையிடம் புகார் அளிக்கப்பட்டது.

பல சங்க பரிவாரத்தின் அங்கத்தினர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களால் பதிவேற்றம் செய்யப்பட்ட பல பதிவுகள் வேக வேகமாக நீக்கப்பட்டன. பலர் இந்த ஆன்லைன் புகார்களை சுட்டிக்காட்டி தயவுசெய்து சங்பரிவாரத்தினர் இது போன்ற பதிவுகளை போட வேண்டாம் என அவர்களின் அங்கத்தினர் களிடம் கதறி அழும் அளவிற்கு நமது சட்ட குழுமத்தினரின் நடவடிக்கைகள் அமைந்தன. அவர்கள் ஆதாரங்களை அழிப்பதற்கு முன்பு நாம் அதன் பதிவுகளை படம் எடுத்து வைத்திருந்து அந்த ஆதாரங்களுடன் புகார் அளித்த காரணத்தினால் அவர்களால் தப்ப முடிய வில்லை. இதன் காரணமாக அவர்கள் தாங்கள் செய்தது தவறு மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறி மறுப்பு வீடியோக்களை போடும் அளவிற்கு நமது நடவடிக்கைகள் அமைந்தன. அல்லாஹ்வுக்கே புகழ் அனைத்தும்.

இந்த வெற்றிகள் சமூக வலைத்தளங் களில் பரவலாக பேசப்பட்டன. இதன் காரண மாக மற்ற மக்களும் இந்த போராட்டத்தில் ஈடுபடும் உற்சாகத்தையும் மனோ தைரியத் தையும் பெற்றனர்.

ஒரு கட்டத்தில் இது ஒரு நடைமுறை ஆகிப்போனது. செய்தித் தாள்களிலும் அல்லது சமூக ஊடகங்களிலும் முஸ்லிம்கள் குறித்து இஸ்லாத்தை குறித்து அவதூறோ அல்லது விஷமக் கருத்துக்களோ பரப்பப் பட்டால் அதை எதிர்கொள்ளும் வழி முறையை அவர்கள் கற்றுக் கொண்டனர். எனவே தமிழகமெங்கும் மற்ற மற்ற இயக்க சகோதரர்களும் இதே வழி முறையை கையாள துவங்கினர். முஸ்லிம் களுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி கிடைத்தது.

ஒரு கட்டத்தில் தமிழகத்தில் செயல்பட்டு வந்த ஊடகங்களான தினமணி, பாலிமர், தந்தி டிவி போன்ற முக்கியமான ஊடகங் களுக்கு எதிராக பல்வேறு இயக்கங்களின் சார்பாக பல்வேறு மக்களின் சார்பாக காவல் துறையிடம் ஆன்லைனில் புகார் அளிக்கப் பட்டது. இதன் காரணமாக தப்லீக் ஜமாஅத் தினர் குறித்து பரப்பப்பட்டு வந்த விஷமக் கருத்துக்கள் நிறுத்தப்பட்டன. அதன்பின்னர் நேரடியாக தப்லீக் ஜமாஅத்தினர் என்ற வார்த்தை பிரயோகம் நிறுத்தப்பட்டு மறை முகமாகவே அவர்களை குற்றம்சாட்ட ஊடகங்களால் முடிந்தது. இன்ஷா அல்லா அதற்கும் நாம் முற்றுப்புள்ளி வைப்போம்.

இப்போதைக்கு இந்த சட்ட நடவடிக்கை களை நம்மால் எடுக்க இயன்றது. விஷமி களுக்கு எதிரான முழுமையான போர் நீதி மன்றங்களின் வழி நிச்சயம் நடத்தப்படும். அவர்கள் செய்து வந்த விஷம பிரச்சாரங் களுக்கு நிச்சயம் பதில் சொல்லியே ஆக வேண்டும் இன்ஷா அல்லாஹ். அதுவரை நாம் ஓயப்போவதில்லை. உறங்கப் போவ தில்லை,

**இப்படி தமிழ்நாட்டில் நாம் ஈன்றெடுத்த வெற்றிகள் குறித்து இந்தியாவெங்கும் பேசப்பட இது இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்லப்பட்டது. விளைவு குஜராத்திலும் விஷமப் பிரச்சாரம் செய்த சங்கபரிவாரத்தினருக்கு எதிராக பலர் ஆன்லைன் வழியாக காவல்துறையிடம் புகார் அளிக்கும் தைரியம் பெற்றனர். அங்கும் பல சங்கபரிவாரத்தினருக்கு எதிராக கைது நடவடிக்கைகள் வேறுவழியின்றி மேற்கொள்ளப் பட்டன என்ற செய்திகள் இங்கே கிடைக்கப் பெற்றன.**

**இவை அனைத்தும் நம்முடைய சட்ட குடும்பத்தினரின் சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு கிடைத்த வெற்றி என்றால் மிகையல்ல. அந்த நடவடிக்கைகள்**

**- இன்ஷா அல்லாஹ் தொடரும்.**




# நமது காலண்டர்கள்

வருடந்தோறும், நாம் காலண்டர்களை வெளியிட்டு வருகின்றோம். அந்தக் காலண்டர்கள் வெறும் நாள்காட்டி அல்ல. முஸ்லிம்களின் வரலாற்றையும், இஸ்லாத்தின் மேன்மையையும், இஸ்லாத்தின் வழிகாட்டுதல் களின் கீழ் முஸ்லிம்கள் மனித இனத்திற்கு ஆற்றிய சேவைகளையும், பறைசாற்றும் அறிவிப்புக்கள்.

## பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதங்கள்

பெருமானார் (ஸல்) அவர்கள், அகிலத்திற் கெல்லாம் அருளப்பட்ட அருள்கொடை என்ற அளவில் உலகிலுள்ள அத்தனை ஆட்சியாளர் களுக்கெல்லாம் எழுதிய கடிதங்களை காலண்டர்களின் பதித்து ஒவ்வொரு வீட்டிலும், அலுவலகங்களிலும் காட்சி தர வைத்தோம்.

பெருமானார் (ஸல்) அவர்களின் கடிகடிதங் களில் இஸ்லாத்தை, ஆட்சியாளர்களுக்கும், அதிகார வர்க்கத்திற்கும், எப்படி எடுத்துச் சொல்லிடுவது (தாஃவா) முறை பளிச்சிட்டது. பாடமாக அமைந்தது.

இரத்தின சுருக்கமான, ஐந்தாறு வரிகளில் இஸ்லாத்தை எடுத்துச் சொல்லிடும் உத்தி - அதை மன்னர்களின் மாமன்றங்களில் வைத் திடும் இங்கிதம். இவற்றையெல்லாம், ஒரு சேர தந்த வைர வரிகள் அந்தக் கடிதங்கள்.

காலண்டர்கள் வழி, ஒரு பெரும் செய்தியைப் பிரகடனப்படுத்தினோம்.

## 1001 கண்டுபிடிப்புகள்

விஞ்ஞானத்தின் விதையை இந்த உலகில் விதைத்தது இஸ்லாம். அந்த அரிய கண்டு பிடிப்புகளின் அடிப்படையில் எழுந்தவையே இன்றைய விஞ்ஞான வளர்ச்சிகள்.

இந்த வளர்ச்சிகளின் அடிப்படையாக அமைந்த *1001* கண்டுபிடிப்புகளை அரிய ஆக்கமாகத் தந்திருக்கின்றார்கள். அவற்றை தமிழில் தந்து காலண்டர்களில் பதித்து, காண்பவர்கள் கவனத்தைக் கவரும் வகையில் தந்தோம். பரப்பினோம். படிப்பவர்கள் இஸ்லாம் விஞ்ஞான உலகின் கண்களைத் திறந்துவிட்டதைக் கண்டு வியந்தார்கள்.

## இந்திய சிந்தனையாளர்கள்

அதேபோல, இந்தியாவை தலை நிமிர வைத்த கண்டுபிடிப்புகளை - முஸ்லிம்களின் கண்டு பிடிப்புகளைப் பட்டியலிட்டுத் தந்தோம், காலண்டர்கள் வழி.

காலண்டர்கள், அறிவுப் புகட்டும் பாட சாலைகளாக அமைந்தன. முஸ்லிம்களின் அறிவியல் தொண்டை அனைவரும் அறிவித்தார்கள்.

## வழிபாட்டுத் தலங்களும் உண்மைகளும் - 2020 காலண்டர்

இந்தியா பாசிசத்தின் முழுமையான பிடிக் குள் சிக்கிக் கொண்டது. "பெண்ணடிமைகள்" தீர்ப்பு என்ற தீராத அநீதியின் வழி வரலாற்றுத் தொன்மைமிக்கப் பாபரி மஸ்ஜித்-ஐ முஸ்லிம்களின் கைகளிலிரந்த பிடுங்கி பாசிஸ்ட்டுகளின் கையில் கொடுத்துவிட்டனர்.

இதேபோல் இந்தியாவிலுள்ள இன்னும் ஆயிரமாயிரம் மஸ்ஜித்களைக் குறிவைத்துச் செயல்படுகின்றனர்.

இப்படி மஸ்ஜித்களைக் கையகப்படுத்து வதற்கு முன்னால் அவற்றைப் பற்றி பலக் கட்டுக் கதைகளைக் கட்டி விடுகின்றனர். அந்தக் கட்டுக் கதைகள் பொய்யானவை என நிரூபிக்கும், ஆவணங்களோடு இந்த வருடத்து காலண்டர்கள் வெளிவந்தன. அல்ஹம்துலில்லாஹ்.

*அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்*

# வேர்கள் பதிப்பகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் – ஜெய்னப் அல் கஸ்ஸாலி, தமிழில் – மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு – மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது – டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு – பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் – மு. குலாம் முஹம்மது, பக்கம் – 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள் – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 60.00 |
| 8. | மால்கம் X – மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்– டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது– ஹிந்தி – டி.எம். மணி, பக்கம் – 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 202 | ரூ. 110.00 |
| 17. | தீண்டாமைக்குத் தீர்வு | ரூ. 30.00 |
| 18. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மத் பக்கம்-163 | ரூ. 110.00 |
| 19. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம் மஹம்மத், பக்கம் -143 | ரூ. 90.00 |
| 20. | இஸ்லாமிய நாகரிகம் – முஸ்தஃபா அல் சிபாய், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் – 206 | ரூ. 130.00 |
| 21. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மத், பக்கம் – 140 | ரூ. 70.00 |
| 22. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 23. | சாதி ஒழிந்தது – கன்னடம், | ரூ. 50.00 |
| 24. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி என்ன? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 25. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மத் பக்கம்:48 | ரூ. 30.00 |
| 26. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஒரு சகாப்தம் – செய்யித் குதுப், தமிழில் : மு. குலாம் முஹம்மத், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 27. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் – 120 | ரூ. 50.00 |
| 28. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 29. | இஸ்லாமும் விஞ்ஞானமும்– பக்கம் :48 | ரூ. 30.00 |
| 30. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 50.00 |
| 31. | இஸ்லாமும் பெண்களும் – பக்கம் : 112 | ரூ. 60.00 |
| 32. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? பக்கம் : 84 | ரூ. 70.00 |
| 33. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? – விரிவாக்கப்பட்ட பதிப்பு – மு. குலாம் முஹம்மத் | ரூ. 30.00 |
| 34. | திருக்குர் ஆன் கூறும் பொறுமை – டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவி, தமிழில் : கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 80.00 |
| 35. | 26/11 – விசாரணை – நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 36. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் – அ. மார்க்ஸ் | ரூ. 20.00 |

37. முஸ்லிம்களை பூண்டோடு ஒழிக்கத் திட்டம்–
வி.டி. இராஜசேகர், தமிழில் : மு. குலாம் முஹம்மத் – பக்கம் : 16 ரூ. 10.00
38. நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்? –
திரு. லஜபதிராய், மூத்த வழக்கறிஞர் – பக்கம் :8 ரூ. 10.00
39. குண்டு வெடிப்புகள், யாரால், யாரால்? –
சுவாமி அசிமானந்தாவின் ஒப்புதல் வாக்குமூலம் – அபூ. அஃப்ரஹ் – பக்கம் : 36 ரூ. 25.00
40. இந்து ராஷ்டிராவின் சிற்பி புரோகித்–இன் லேப்டாப்பில் இருந்ததென்ன? பக்கம்: 27 ரூ. 20.00
41. கறுப்பாயி என்கின்ற நூர்ஜஹான். கதை ஆசிரியர் அன்வர் பாலசிங்கத்துடன் நேர்முகம் ரூ.25.00
42. கூரியூர் ஜின்னா ஷஹீத் – மு. குலாம் முஹம்மத், பக்கம் : 84 ரூ. 60.00
43. முஸ்லிம்களும் ஒடுக்கப்பட்டோரும், பக்கம் 16 ரூ. 20.00
44. இந்தியாவின் ஒரே தீவிரவாத அமைப்பு, எஸ்.எம். முஷ்ரிப், IPS, பக்கம் : 64 ரூ. 30.00
45. சுதந்திர இந்தியாவின் முதல் தீவிரவாதம், காந்திஜி கொலை ஏன்? எப்படி? பக்கம் : 40 ரூ. 30.00

## எமது விற்பனையில். . .

01. கோவை கலவரத்தில் எனது சாட்சியம்–
A.V. அப்துல் நாசர், Ex. M.L.A., எழுத்தாக்கம் : பழனி ஷஹான் ரூ. 100.00
02. மரிஜாப்பி – சி.பி.எம். அரசின் தலித் படுகொலைகள்–
ராஸ் மாலிக், தமிழில் : இனியன் இளங்கோ, தலித் முரசு ரூ. 100.00
03. குஜராத் கோப்புகள் – மறைக்கப்பட்ட கோர வடிவங்கள் –
ரானா அயூப், தமிழில் : ச. வீரமணி, பாரதி புத்தகாலயம் ரூ. 170.00

## BOOKS IN ENGLISH

01. END OF CASTEISM - T.M. Umar Farooq,
English Rendering : M. Gulam Mohammed, Vergal Pathippagam Rs. 50.00
02. THE GREAT BETRAYAL - Elyass Davidson, By Pharos Media Rs. 695.00
03. MUHAMMED THE PROPHET FOR OUR TIME - Karen Armstrong Rs. 325.00
04. KAFKA LAND - PREJUDICE, LAW AND COUNTER TERRORISM - Manisha Sethi Rs. 350.00
05. WHO KILLED KARKARE -
The Real face of Terrorism in India - S.M. Mushrif, IPS, 5th Edition Rs. 300.00
06. 26/11 - PROBE WAY JUDICIARY ALSO FAILED - S.M. Mushrif Rs. 275.00
07. ASSAM'S DOUBTFUL CITIZENS, FACT OR FICTION - Kamaluddin Ahamed Rs. 60.00
08. MUSLIMS AGAINST PARTITION OF INDIA - Shamsul Islam , Pharos Media Rs. 280.00
09. PANDID RAMPRASAD BISMI, ASHFAQULLAH KHAN (EPITOMS OF HINDU MUSLIM UNITY)
- Syed Naseer Ahamed Rs. 25.00
10. IMAGE AND SUBSTANCE - MODI'S FIRST YEAR OF OFFICE - Nilofar Suhrawardy Rs. 150.00

## BOOKS IN HINDI - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது

## BOOKS IN KANNADA - VERGAL PATHIPPAGAM

01. ஜாதி ஒழிந்தது – டி.எம். உமர் பாரூக் ரூ. 50.00
02. நீயும் புறப்படு இஸ்லாத்தை நோக்கி – கொடிக்கால் ஷேஹ் அப்துல்லாஹ் ரூ. 30.00

## வேர்கள் பதிப்பகம்,

52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை – 600 001. தொடர்ப்புக்கு : 8148129887

வங்கி மூலம் பணம் செலுத்த விரும்புவோர்:
**DARUL ISLAM FOUNDATION TRUST,**
**CANARA BANK** Account 1287101017301
St. Mary's Road, R.A. Puram, Chennai - 600 028

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.